பக்கங்கள்:08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 04 வியாழக்கிழமை 18.05.2023 கதிர்189

# இனப்படுகொலையின் 14ஆவது நினைவேந்தல்

## இன்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில்

**இறுதிப் போரில் ஒடுங்கிய நிலப்பரப்புக்குள், போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களோடு தமிழ் இனப் படுகொலை நிகழ்த்தப்பட்டதன் 14ஆவது நினைவேந்தல் இன்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இடம்பெறுகின்றது.**

**நினைவேந்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு புதன்கிழமை அறிவித்தது.**

**‘‘முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தமிழ் இனப்படுகொலை, நினைவேந்தல் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அனைவரும் அணிதிரண்டு வாருங்கள்’’ என்று பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர்களில்** ☞2



# இனி இது ரகசியம் அல்ல!

இன்று தமிழ் இனம் தனது தனிநாட்டுக் கோரிக்கைக்காக நடத்திய ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நாள். தனி நாட்டுக் கோரிக்கையை முறியடிப்பதற்காக நிகழ்த்தப்பட்ட மனிதப் பேரவலங்களின் 14ஆவது நினைவுநாள். இந்த நாள் ஒட்டுமொத்ததமிழர்களுக்கும்தமது அரசியல் விருப்பை வென்றெடுப்பதற்கான ஆத்ம பலத்தைத் தரவேண்டிய நாள்.

இத்தகையஒருநாளில்ஈழத்தமிழர்களின் அரசியல் எந்த வகையில் இருக்கின்றது, அது முள்ளிவாய்க்காலில் நிறைவுபெற்ற, ஓர் இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்திற்கு நியாயம் சேர்க்கும் வகையிலோ, அல்லது மக்களாலும் போராளிகளாலும்புரியப்பட்டதியாகங்களுக்கு ஆகக் குறைந்த நீதியையாவது நிலை நாட்டுவதாகவோ இருக்கின்றதா என்றால் இல்லை என்பதே பதில்.

தமிழ்க் கட்சிகள் அரசியல் தீர்வு ☞2

# நினைவூர்திகள் வந்து சேர்ந்தன

(சண்முகம் தவசீலன்)

தமிழ்இனப்படுகொலையின் நினைவாக வடக்கிலும் கிழக்கிலும் இருந்து புறப்பட்ட

நினைவு ஊர்திகள் முல்லைத்தீவை நேற்று வந்தடைந்தன.

தாயக நினைவேந்தல் அமைப்பின்ஏற்பாட்டில்முல்லைத் தீவில் இருந்துபுறப்பட்ட நினைவூர்தி, வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தனது பவனியை நிறைவு செய்துகொண்டு நேற்றிரவு வள்ளிபுனத்தைவந்தடைந்தது.

தமிழ்இனப்படுகொலைக்கு நீதி கோரியும் இனப்படுகொலையைஇளஞ்சந்ததியினருக்கு கொண்டுசேர்க்கும்வகையிலும் முல்லைத்தீவில் இருந்து முள்ளிவாய்க்கால்தமிழ் இனப் படுகொலை நினைவு படங்கள் தாங்கிய ஊர்திப் பவனியானது மே 12 தொடங்கியிருந்தது.

முல்லைத்தீவுமாவட்டத்தில் இறுதி யுத்த காலப் பகுதியில் கடுமையான ஷெல் தாக்குதல்கள் மற்றும் விமானத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தாக்குதல்களால் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கொல்லப்பட்ட கப்பலடிப் பகுதியிலிருந்து முள்ளிவாய்க்கால் மண்ணினைஎடுத்துதொடங்கிய இந்த ஊர்தி வவுனியா சென்று மன்னார் சென்று அங்கிருந்து வெள்ளாங்குளம் ஊடாக மல்லாவி நகரை அடைந்து மாங்குளம் கிளிநொச்சி பூநகரி சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்தைசென்றடைந்து அங்குபல்வேறுஇடங்களுக்கும் சென்று இன்று ஆறாவது நாள் பயணம் காலை யாழ். மாவட்டம், வரணி மத்திய கல்லூரி முன்றலில் இருந்து ஆரம்பமானது இந்த ஊர்திப் பவனியானதுகொடிகாமம்பளை பரந்தன் தர்மபுரம் விசுவமடு ஊடாக வள்ளிபுனம் பகுதியை வந்தடைந்துள்ளது.

இதனை தொடர்ந்து இன்று காலை வள்ளிபுனம் செஞ்சோலை வளாக சந்தியில் இருந்து ஆரம்பமாகும் ஊர்தி பவனி புதுக்குடியிருப்பு சந்தி சென்று காலை 8 மணிக்கு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் இருந்து ஊர்தியுடன் மோட்டார் சைக்கிள்கள்முச்சக்கரவண்டிகள் அடங்கிய பெரும் வாகனப் பேரணியாக

முள்ளிவாய்க்கால் முற்றத்தை சென்றடையவுள்ளதாகவும் எனவே அனைவரையும் இந்தவாகன பேரணியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அம்பாறையில்

இருந்து முள்ளிவாய்க்கால் வரை தமிழின படுகொலைக்கு நீதி ☞2

# ஆளுநர்களுக்கு வாழ்த்துக்கள்

வடக்கு, கிழக்கு ஆளுநர்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியூதீன் ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களை வாழ்த்தி ரவூப் ஹக்கீம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக இருந்துவரும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவதற்கு இருவரும் இணைந்து செயற்படுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. குறிப்பாக அங்கு காணப்படும் காணிப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பில் கலந்தாலோசிப்பதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கல்வி, சுகாதார துறைகளில் பெரும் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை, போக்குவரத்து, மாணவர்களுக்குத் தேவையான தளபாட தேவைகளை ஏற்படுத்திக்கொடுப்பது போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர்.

அதேபோன்று வைத்தியசாலைகளில் பல தேவைப்பாடுகள் இருக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளுக்குதீர்வுகாணப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு மாகாணத்திலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பிரதிநிதிகள் சகிதம் விரைவில் ஆளுநருடன் சந்திப்பொன்றை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் - என்றுள்ளது. ☞2

# மகாநாயக்கர்கள் நடவடிக்கை எடுக்க பிக்குகள் குழு கண்டி சென்று வலியுறுத்து

மதநல்லிணக்கம்குலைவதற்கு முன்னதாக பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பிக்குகள் குழுவென்று வலியுறுத்தியுள்ளது. குறித்த பிக்குகள் குழுவானது செவ்வாய்க்கிழமைகண்டிக்குச் சென்று முதலில் மல்வத்து பீடத்தின்பீடாதிபதிதிப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்தது. அதனையடுத்து அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி வரக்கா கொட ஸ்ரீ ஞானரத்ன தேரரரைச் சந்தித்தது.

இதன்போது, தற்போது ஜெரோம் என்பவர் வெளியிட்டுள்ள கருத் துக்களானது மத நல்லிணக்கத்துக்கு பெருங் குந்தகமாக உள்ளது. இது சம்பந்தமாக உடனடியாக கவனத்தில் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

முதற்சுற்றிலேயே இந்த விடயங்களுக்குமுற்றுப்புள்ளி வைக்காது விட்டால் பெரும் பிரச்சினைகள் உருவாகும் என்றும்சுட்டிக்காட்டியுள்ளனர்.

# 3 வாரங்களில் மருந்துகளின் விலைகளை குறைக்கத் திட்டம்

எதிர்வரும் 3வாரங்களுக்குள் மருந்து பொருட்களுக்கான விலைகளை குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகசுகாதாரஅமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

டொலருக்கு இணையாக ரூபாவின் பெறுமதி வலுவடைந்ததன் பயனை கூடியவிரைவில்மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய மருந்து பொருட்களின் விலைகளை 10 தொடக்கம் 15 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் உறுப்பினர்கள் இன்று (நேற்று) கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது. ரூபாவின் பெறுமதி உயர்வடைந்த தரவுகளைஆராய்ந்துமருந்து பொருட்களின் விலைத் திருத்தம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையைசுகாதார அமைச்சரிடம் உடனடியாக கையளிக்கவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அனைத்து மத உரிமைகளும் கிழக்கில் பாதுகாக்கப்படும்

## புதிய ஆளுநர் உறுதிமொழி



கிழக்கில் அனைத்து மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று புதியஆளுநர்செந்தில்தொண்டமான் தெரிவித்தார். மலையகத்தில் முன்னெடுத்தைப்போன்று கிழக்கு மாகாணத்திலும் வேலைத் திட்டங்களைமுன்னெடுப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கிழக்கு மாகாண ஆளுநராக பதவியேற்றுக்கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், அதன்பின்னர் கொள்ளுப்பிட்டி பித்தள சந்தியில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை அலுவலகத்திற்குச் சென்றிருந்தார்.

அங்கு, அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் உள்ளிட்டவர்களால் வரவேற்பு அளிக்கப்பட்டது., அறுமுகன் தொண்டமான், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு மலர் மலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

இதனையடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னை ஆளுநராக நியமித்தமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவருடைய இலக்குகள் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும். அனைத்து மதங்களினதும் உரிமைகள் அங்கு பாதுகாக்கப்படும். கிழக்கு மாகாணத்திலும் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் - என்றார்.

# சர்வதேசச் சட்டத்தின் கீழ் போதகரை விசாரியுங்கள்

## உதயன கம்பன்பில வலியுறுத்து

ஜெரோம்பெர்னாண்டோ மீது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ஐ.சி.சி.பி.ஆர்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலதெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கட்சி அலுவலகத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத நல்லிணக்கத்திற்கு எதிராகக் கருத்து வெளியிட்ட ஜெரோம் பெர்னாண்டோ மீது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ் நடவடிக்கைஎடுக்கவேண்டும்

மதவெறியை பரப்பிய ஜெரோம்பெர்னாண்டோவுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களுக்கு எதிராகவும் அதேசட்டத்தின்கீழ்நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

பௌத்த மதத்தையும், இந்து மதத்தையும், இஸ்லாத்தையும் அவமதித்த ஜெரோம் பெர்னாண்டோ ☞2

# ஜெரோம் போதகரின் செயற்பாடு சஹ்ரானின் செய்களையே ஒத்தது

## ஞானசார தேரர் குற்றஞ்சாட்டு

ஜெரோம் போதகரின் செயற்பாடுகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலாளி சஹ்ரான் செயற்பாடுகளை ஒத்தது என்று பொது பல சேனாவின்பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றஞ்சாட்டினார்.

அவருடையஅலுவலகத்தில் புதன்கிழமை நடத் திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகள், விளையாட்டு வீரவீராங்கனைகள், சட்டத்தரணிகள், நீதிபதிகள், மாணவர்கள், வங்கியாளர்கள், இறைவரித் திணைக்களத்தில் உள்ளவர்கள் என்று ஜெரோமைப் பின்பற்றுபவர்கள் பலமட்டங்களில் உள்ளார்கள். ஜெரோமின் செயற்பாடுகள் சஹ்ரானின்செயற்பாடுகளை ஒத்ததாக உள்ளன.

சஹ்ரான் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தி முஸ்லிம் மக்களை பழிச் சொல்லுக்கு உள்ளாக்கினார். சஹ்ரான் சதியொன்றை மேற்கொள்கின்றபோது நாம் அதனைச்சுட்டிக்காட்டினோம்.

என்னையும் எமது தரப்பினரையும் இனவாதிகள், மதவாதிகள் என்று கூறுகின்றார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவோ, ☞2

# ஜெரோம் போதகரின் பின்னால் குழப்பத்தை விரும்பும் சக்திகள்

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

ஜெரோம் பொர்ணான்டோவின் பின்னால் குழப்பத்தை விரும்பும் சக்திகள் இருப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமானமொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

புறக்கோட்டையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜெரோம் பெர்னாண்டோவின் பின்னணியில் இருப்பதாகத் தெரிகிற 'டைகோட் ஜென்டில்மென்ஸ்' குழு குறித்தும், குறிப்பாக அண்மையில் அல்-ஜசீரா செய்திஊடகம்வெளிப்படுத்திய சர்வதேச பணமோசடி தொடர்பில் அவருக்கும் ஜிம்பாப்வே நாட்டவருக்கும் இடையே நடந்த இரகசிய கொடுக்கல் வாங்கல்கள் குறித்தும் உண்மைகளை வெளிப்படுத்த விரிவான விசாரணை அவசியம்.

ஏற்கனவேமதநல்லிணக்கத்தைக் குலைத்து, பொதுக் குழப்பத்தைஏற்படுத்திநாட்டை விட்டுவெளியேறியுள்ள இவர், எதிர்வரும் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்திலும் அதனை அடையும் மார்க்கத்திலும் இன்னும் பல அணிகளாகப் பிளவுபட்டு,ஒற்றைப்புள்ளியில் இணைவதற்குப் பதில் பல துண்டுகளாகச்சிதறியிருக்கும் போக்கையும் அது வளர்ந்து செல்லும் போக்கையுமே இந்தப் 14 வருடங்களில் ஈழத் தமிழ் அரசியல் கண்டுள்ளது.

முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற இரு பிரிவுகளாகப் பிளவுபட்ட தமிழ் அரசியல் மேடை இப்போதுநான்குபிரிவுகளாகப் பிளவுண்டுள்ளது.தமிழ்அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகக் கூட்டணி, விக்னேஸ்வரன் அணிஆகியநான்குதரப்புக்கள் தமது அரசியல் சுயலாபம் கருதி ஈழத் தமிழர்களின் அரசியலைக் கையாள முற்படுகின்றன. ஒரு தலைமையின்கீழ்தேர்தலை எதிர்கொண்டுநாடாளுமன்றக் கதிரைகளையும் மாகாண சபைக் கதிரைகளையும் பிடிப்பதற்குத் தயாராக இருக்கும்இவர்கள்,தீர்வுவிடயத்தில் மட்டும் ஒரு தலைமையின் கீழ் ஒற்றைக் கருத்தை வெளிப்படுத்துவதற்குத் தயாரில்லை. தீர்வு தொடர்பில் இவர்களுக்கு இடையில் கொள்ளை முரண் இல்லையாயினும் யார் குத்தி அரிசியானது என்கிற போட்டியில்ஓரணியாகநின்று அரசியல்தீர்வைப்பெறுவதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதே உண்மை.

அண்மையில் நடந்து முடிந்த அரசுத் தலைவருடனானபேச்சிலும்இதுவே நடந்து முடிந்தது. அந்தப் பேச்சு மேசையில் திடீரென முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஓர் ஆவணத்தைத் தூக்கி வைத்தார். அந்த ஆவணம் மாகாண சபைகளின் செயற்பாடு தொடர்பிலானது. மாகாண சபைகளுக்குத் தேர்தல் வைக்கப்படாமல் நிறுத்தி கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாகிவிட்டன. ஒவ்வொரு மாகாணத்திற்கு ஒவ்வொரு காலப் பகுதியில் தேர்தல் நடத்தப்பட்டதால் அவற்றின் காலம் வெவ்வேறு ஆண்டுகளில் நிறைவுக்கு வந்தாலும் முதலாவது மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படாமல்விட்டு 10 ஆண்டுகளாகிவிட்டது.

இந்த நிலையில் குறைந்தபட்சம் வடக்கு கிழக்கு மாகாணத்திற்காவது தேர்தலை நடத்தும்படி அந்தக் கூட்டத்தில்வலியுறுத்தப்பட்டது. அப்போதே முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன்னிடமிருந்தஆவணத்தை அந்தப்பேச்சுமேசையில்முன்வைத்தார். அந்த ஆவணம் மாகாண சபைத் தேர்தல் மீண்டும் நடத்தப்படுவதற்கு முன்னதாகரணில்ஆட்சியால் செய்யப்படவேண்டிய பல்வேறு விடயங்களையும் பட்டியலிட்டது.

உதாரணத்திற்குமாகாண அரசின் கீழ் இருந்து மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் எடுக்கப்பட்ட மாவட்டச் செயலம், பிரதேச செயலகம், ஆகியவற்றை மீண்டும் மாகாண சபையின் கீழ் கொண்டு வரவேண்டும், தேசியப் பாடசாலைகள் என்று தரமுயர்த்தப்பட்டு மத்திய அரசின் கீழ் கொண்டு செல் லப்பட்ட பாடசாலைகள் மீண்டும்மாகாணஅரசின்கீழ் கொண்டுவரப்படவேண்டும், போதனாவைத்தியசாலைகள் மற்றும் சிறப்பு நோய் வைத்தியசாலைகள் தவிர்ந்த அனைத்து வைத்தியசாலைகளும் மாகாண சபைகளின் கீழ் கொண்டவரப்படவேண்டும்போன்றவிடயங்கள் கூறப்பட்டிருந்தன.

இது தவிர மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாகாண அரசுகளின் பட்டியிலில் உள்ள விடயங்கள் தொடர்பாக மாகாண அரசுகளுக்கான நியதிச் சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.காணிமற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. இப்படிச் செய்யப்படவேண்டியவைகள் என்றுஅந்தஆவணம்குறித்த விடயங்கள் நீண்ட பட்டியல்.

இந்தப் பட்டியலில் சொல்லப்பட்டுள்ளவற்றைச் செய்வதற்கு வடக்கு கிழக்கு என இரு மாகாண சபைகளுக்கும்தனித்தனியாக ஆலோசனைக் சபைகளை உருவாக்குவதற்கும் அந்த ஆவணத்தில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த ஆலோசனைச் சபையில் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, மாகாண சபை உறுப்பினர்களோ, பிரதேச சபை உறுப்பினர்களோ உள்ளடக்கப்படக்கூடாது என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. அதாவது இன்று முன்னணியில்நின்றுஅரசியல் செய்யும் எந்தவொரு மக்கள் பிரதிநிதியையும்தவிர்த்துவிட்டு இந்த ஆலோசனைச் சபைக்கான யோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

மாகாண சபைக்கான அடுத்த தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக இந்த ஆலோசனைச் சபை இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைச் செய்து முடிக்கவேண்டும். இதற்காகச் இன்னும் சில மாதங்கள் தேர்தல் தள்ளிப்போனாலும் காரியமில்லை என்று விக்னேஸ்வரன் தெரிவித்தார். அதாவது இவ்வளவு காரியங்களையும் சில மாதங்களில் ஆற்றி முடிக்கமுடியும் என்பது அவரது கருத்து. அவர் தலைமையிலான 5 வருட ஆட்சியில் வடக்கு மாகாண சபையால் ஆக்க முடிந்த நியதிச் சட்டங்களின் எண்ணிக்கை 22 மட்டுமே. அப்படியிருக்கும்போது இந்த ஆலோசனைச் சபை உருவாக்க வேண்டும் என்று அடையாளப் படுத்தப்பட்டிருக்கும் நியதிச் சட்டங்களின் எண்ணிக்கையே பல, அதைவிட வேறு பல முக்கிய சர்ச்சைக்குரிய விடயங்களையும் அது ஆற்றவேண்டியிருக்கும் நிலையில் எப்படி சில மாதங்களில் அதை முடிக்க முடியும் என்பதற்கு அவர் விளக்கம் தரவில்லை.

அதுஒருபுறமிருக்க இந்த ஆவணத்தை அவர் அங்கு முன்வைத்துவிட்டு அதை ரணில் விக்கிரமசிங்கவிடம் கொடுக்க முற்பட்டபோது, நீங்கள் தந்தது என்னிடம் இருக்கின்றதுஎன்றுகூறிஅவர் அதனைக் கையிலெடுத்தார். அதாவது இந்தக் கூட்டத்திற்கு முன்பாகவே அந்த ஆவணம் ஜனாதிபதியின் கைகளுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டிருக்கின்றது. அங்கிருந்த மற்றைய அரசியல் கட்சிகளுக்குப் பெரும் அதிர்ச்சி. ஏனெனில் பிள்ளையான் தவிர அந்த ஆவணத்தைஅதற்குமுன்னர் கண்களால் பார்த்த எவரும் அந்தக் கூட்டத்தில் இல்லை. இப்படியொரு ஆவணம் அதுவும்தமிழர்தரப்பிலிருந்து பேச்சு மேசைக்கு வரும் என்று எதிர்பார்த்திருக்காத மற்றைய கட்சிகள் முதலில் அதிர்ந்துபோனாலும்பின்னர் சுதாகரித்துக்கொண்டு அதனை ஏற்க முடியாது என்று உடனடியாக நிராகரித்துவிட்டன.

இதில் மட்டும் தமிழ் அரசுக் கட்சி ஜனநாயகக் கூட்டணி என்கிற வேறுபாடு இருக்கவில்லை. விக்னேஸ்வரன் என்கிற வில்லனுக்கு முன்னாள் எதிரிக்குஎதிரிநண்பன்தானே அதனால்பழையகூட்டமைப்பு தலைவர்கள்எல்லோரும்அந்த ஆவணத்தைப்பரிசீலிப்பதற்கு மறுத்துவிட்டார்கள். அதில் தாங்கள் கையெழுத்திடவில்லை என்று உடனடியாகவேநிராகரித்துவிட்டார்கள். ஆனால், உண்மையில் அவர்களுக்கு இந்த ஆவணம் பற்றித் தெரியாதா என்றால், அது அந்தப் பேச்சு மேசைக்குத் திடீரென வந்து குதிக்கப் போகிறது என்பது முற்றிலுமாகத் தெரியாது, ஆனால் ஆவணம் தொடர்பில் அவர்கள் அறிந்தேயிருந்தார்கள்.

ஏனெனில் இந்த ஆவணத்தைத்தயாரிப்பதில்வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் செயலாளரான காசிலிங்கம்விக்னேஸ்வரன் சில காலங்களிற்கு முன்னர் மும்முரமாக ஓடித் திரிந்தார். தான் ஒரு தீவிர இந்திய ஆதரவாளன்என்றுதன்னை அடையாளப்படுத்திக்கொள்ளக் கூடியவர் அவர். ஜனவரி மாதமளவில் யாழ்ப்பாணம் வந்தஅவர்,மாகாணசபையின் இந்த விடயங்கள் தொடர்பில் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து அவற்றை ஓர் இணக்கப்பாட்டுக்குக்கொண்டு வருவதற்கு முயற்சித்தார். அவரது முயற்சியின் பின்னணி தொடர்பில் அறியாமையாலோ அல்லது அலட்சியத்தாலோ தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அது தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

அதேநேரம் இந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளவை பெரும்பாலும் எல்லாக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விடயம்தான் என்கிற வகையில் அல்லது தமிழ்த் தேசியம்பேசும் கட்சிகளால் ஏற்கனவே வலியுறுத்தப்பட்டு வரும் விடயங்கள்தான் என்கிற வகையில் அவரும்கூட தன்னோடு இது விடயத்தில் உடனடியாக இணைந்துபோகத் தயாராக இருந்த கட்சிகளோடு சேர்ந்து பணியாற்றிய அளவிற்கு தேசியப் பரப்பிலிருந்த மற்றைய கட்சிகளோடு இதுபற்றிப் பேசவில்லை. இறுதியில் ஒரு வரைபைத் தாயாரித்த பின்னர்கூட அவர்களிடம் அதனைக் காண்பிக்கவில்லை. ஆனால் அந்தவரைவில் இது குறித்துப் பேசப்பட்டகட்சிகளின்பெயர்கள் குறிக்கப்பட்டு அவை இந்த ஆவணத்தில் கையெழுத்து வைக்க மறுத்திவிட்டன என்று குறிக்கப்பட்டிருந்தது. ஈபிடிபி போன்ற வேறு சில கட்சிகள் ஆவணத்தை ஏற்றுக்கொண்டன ஆனால் கையெழுத்தை வைப்பதற்கு அவற்றின் தலைவர்களை உடனடியாகப் பிடிக்க முடியவில்லைஎன்றுதெரிவிக்கப்பட்டிருந்தது. அதாவது அவர்கள் கையெழுத்துவைப்பார்கள்என்தாகக் காட்டப்பட்டிருந்தது. ஆனால் அதில்ஈபிடிபிபோன்றகட்சிகள் உண்மை அப்படியல்ல என்கின்றது.

இப்படி இந்த ஆவணம் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளின் முழுமையானசீராய்வுக்கு உட்படுத்தப்படாமல் ரணிலின் பேச்சு மேசைக்குஏன்வந்தது?என்ன அவசரம்? யாருக்கு அவசரம்? இந்தக் கேள்விகளுக்குப் பதிலில்லை. இப்போது அதிலுள்ள சில விடயங்கள் தமிழ்த் தேசியத் தரப்பின் அடிப்படை விருப்புக்களுக்கே முரணானவை என்கின்றன அந்தத் தரப்புக்கள். அதாவது வடக்குக் கிழக்கு இணைப்பே தமிழர் தரப்பின் விருப்பாக இருக்கும்போதுதனித்தனியாக ஏன் ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்படவேண்டும் என்று கேட்கப்படுகின்றது. இதுபோன்ற வேறு சில விடயங்களும்உள்ளன. நான் அவற்றையும்எழுதப்போனால் இது மிக நீண்டுவிடும். எனவேஅவற்றைப்பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.

இங்கே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால், மக்களுக்கு எந்த நல்லதைச் செய்வதென்றாலும்அதில்தன் பெயர் வந்துவிடவேண்டும் என்கிற எமது பரவணிக் குணம் காரணமாகவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தரப்பில் ஓர் முழுமையான இணக்கம் எட்டப்படுவதற்கு முன்னராக அது அரசுத் தரப்புக்குப் பகிரப்பட்டுள்ளது. இன்னும் ஒருபடி மேலே போய் அந்த ஆவணத்திற்கு பிள்ளையான்உள்ளிட்ட வேறு சில மக்களுக்கு யாரென்றே தெரியாத அமைப்புக்களும் கட்சிகளும் ஆதரவு என்று காட்ட முற்பட்டு அதனை நிறைவேற்ற கள்ளத்தனமாக முயன்றிருப்பது. அதாவது தமிழர்களின் விருப்புத் தொடர்பாக தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகளின் இணக்கத்தைப் பெறாது அரசதரப்புடன்நிற்பவர்களின் சம்மதத்தோடு இந்த ஆவணத்தை நிறைவேற்ற முயன்றிருக்கிறார் விக்னேஸ்வரன்.

இது ஏற்புடையதல்ல என்றாலும், யாராலும் யாருக்கும் புத்தி சொல்ல முடியாத தமிழ் அரசியல் பரப்பில் இதுதான் யதார்த்தம். இப்படித்தான் சிதறிக் குழம்பியிருக்கிறது தமிழ் அரசியல் தளம். இந்தக் குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிப்பது ரணில் விக்கிரமசிங்கவுக்குச்சிரமமா என்ன?

**இடிமின்னல்**

## ஆளுநர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளதாவது:

பிராந்தியநலன்களிலும், பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் நோக்குகளிலும் இணைந்து செயற்படுவதற்கானசந்தர்ப்பம் கிடைத்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களான பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்தலைவர்செந்தில் தொண்டமான் ஆகியோர் சிறுபான்மை சமூகங்களின் பூர்வீகத்திலுள்ளவர்கள். இதனால், எமது மக்களின் அபிலாஷைகள் பற்றி புதிதாக இவர்களுக்கு எதையும் சொல்ல வேண்டியதும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அன்றாட மற்றும் அடிப்படைப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. இவற்றில், போரின் வடுக்களால் ஏற்பட்ட தேவைகளுக்குமுக்கியத்துவம் வழங்கவேண்டும்.

இடப்பெயர்வு, மீள்குடியமர்தல், காணிகளின் உரித்துக்களைப் பெறுதல், வாக்குரிமை மற்றும் சுயதொழில்ஊக்குவிப்புஆகிய திட்டங்களில்ஆளுநர்களுடன் இணைந்து செயற்படலாம் என்றநம்பிக்கைஏற்பட்டுள்ளது - என்றுள்ளது.

## ஞானசார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏரான் விக்கிரமரட்னவுக்கோ எதுவும் பேசமுடியாது.

ஜெரோம் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். அதனால் சட்டங்களை அமுலாக்க முடியாது என்று கூறிவிட முடியாது. ஏனெனில் ஜெரோம் மீண்டும் நாட்டுக்கு வருவதாகக் கூறியுள்ளார். அவர் மீது நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது.

உண்மையில் ஜெரோம் போன்றவர்கள் பாதுகாக்கப்படுவதற்கு பலர் காரணமாக இருக்கின்றார்கள். அவற்றில் மிகமுக்கியமாகஊடகங்களில் இருக்கின்றனர். வேறுபல இடங்களிலும் உள்ளார்கள். அதிலும் சிரச ஊடகத்தின் ஷெவான் டானியல் முக்கியமான ஒருவராக உள்ளார்.

தற்போது நாட்டில் அழிவுக்கு வித்திடும் ஊடகக் கும்பலொன்று உருவாகியுள்ளது. யூடியூப் ஊடாக எம்மை விமர்சிக்கின்றார்கள். ஆனால்அவர்கள்ஜெரோபின் வர்த்தக செயற்பாடுகள், அவருக்கு கிடைக்கும் பணம் எங்கிருந்து யார் அனுப்பியது உள்ளிட்ட விடங்களை உடன் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுசம்பந்தமான விசாரணைகளை இந்த ஆட்சி தொடங்கவேண்டும்.

அமெரிக்கத்தூதுவர் எது நடைபெற்றாலும் அதற்கு வருவார். தூங்காது கதைகளைச் சொல்வார். அவரே கூட்டங்களில் பங்களிப்பைச் செய்கின்றார். அவருக்கு மத நல்லிணக்கம் பற்றி பேசாது தூக்கமே வராது. அவர் இப்போது என்ன செய்கின்றார்? என்ன சொல்கின்றார் என்பதைக் கண்டறிய வேண்டியுள்ளது.

இதனைவிடவும்,சந்திரிகா அம்மையாருக்கும் இந்த விடயங்கள் சம்பந்தமாக பதிலளிக்காது மௌனமாகவே உள்ளார். அவரும் அந்த விடயத்தினை கவத்தில் கொள்ள வேண்டும் -என்றார்.

## ஜெரோம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகிறேன். அந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் உங்கள் குடும்பத்துடன் ஒன்று கூடுங்கள் என்று மேலும் வேண்டுகோள் விடுப்பது இந்த நாட்டிற்குத் தீ வைக்கும் நோக்கிலானது. இது அவருக்குப் பின்னால் உள்ள சக்திகளுக்கு காணப்படுகின்றனதீவிரமான ஆசையாகவுள்ளது.

நாட்டைவிட்டு வெளியேறிய ஜெரோம் பெர்னாண்டோ, யாருடன் கலந்துரையாடினார், எந்தெந்தப் படைகளுடன் கலந்துரையாடினார்,அதனால் ஏற்படும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்து ஆட்சியாளர்கள் உடனடியாகவிசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

## இனப்படுகொலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரான அருட்பணி லியோ அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.

நினைவேந்தல் நிகழ்வு நிகழ்வு தொடர்பில் புதன்கிழமை மாலை செய்தியாளர்ளிடம் பேசிய அவர், காலை 10.30 மணிக்கு வழமை போன்று நிகழ்வுகள் இடம்பெறும் என்றார்.நினைவேந்தலுக்கு வரும் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவதற்கானஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெறும்போது, ஆலயங்களில் மணியோசை எழுப்பி உறவுகளைஅஞ்சலிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

வழக்கமாக முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இடம்பெறும் நிகழ்வைப் புறக்கணித்து கடற்கரையோரத்தில் தனியாக அஞ்சலி நிகழ்வை நடத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இம்முறை அதனைக் கைவிட்டுள்ளது. பிரதான நிகழ்விடத்திலேயே தாமும் அஞ்சலி செலுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமும் முள்ளிவாய்க்கால் உயிர்க் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்று வந்த நிலையில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு இன்று இடம்பெறுகின்றது. இதனையொட்டி கரைச்சி, தர்மபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய வர்த்தக சங்கங்கள் தமது பகுதிக் கடைகள் அனைத்தும்மூடப்பட்டிருக்கும் என்று அறிவித்துள்ளன.

அனைத்து இடங்களிலும் கடைகள்,அரசஅலுவலகங்கள், தனியார் நிறுவனங்களை அடைத்து இன்றைய அஞ்சலி நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அழைப்பு விடுத்துள்ளது.

## சர்வதேசச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் மற்ற மதங்களை விடவும் கிறிஸ்தவ மதத்தையே அதிகம் அவமதித்துள்ளார்.

கிறிஸ்தவ மத போதகர் போல் வேடமணிந்து, பிற மதங்களைஅவர்இழிவுபடுத்தி வருகிறார். அந்த அவமானம் பெரும்பாலும் கிறிஸ்தவ மதத்திற்கு இழைக்கப்படுதாக உள்ளது.இந்நிலையில்,பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள்மற்றும்கத்தோலிக்கர்கள் உட்பட மத நல்லிணக்கத்தை மதிக்கும் ஒட்டு மொத்த தேசத்தவரும் அவருக்குஎதிராகச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

2007 வரை, மத மோதல்களை உருவாக்க முயற்சிப்பவர்களைத் தண்டிக்கமட்டுமேகுற்றவியல் சட்டம் இருந்தது.ஆனால் 2007ஆம்ஆண்டின்56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் படி, இது நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஒருவர் பிணை வழங்க முடியாத மிகக் கடுமையான குற்றமாகும். உயர் நீதிமன்ற நீதிபதி கூட சிறப்புக் காரணங்களுக்காக மட்டுமே பிணை வழங்க வேண்டும். மேலும், இதுபோன்ற வழக்கு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, மற்ற வழக்குகளைத் தவிர்த்து, முன்னுரிமைஅடிப்படையில் இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது -என்றார்.

## நினைவூர்திகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிப் புறப்பட்ட படுகொலை உருவப் படங்கள் தாங்கிய ஊர்தி நேற்றிரவவு முள்ளிவாக்கால்நினைவுமுற்றத்தை அடைந்தது அம்பாறை வீரமுனை கோவிலில் 1990ம் ஆண்டு தமிழர்கள் 175 பேர் படுகொலை செய்யப்பட்ட நினைவுத் தூபியில் சுடர் ஏற்றி படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஆத்ம சாந்திவேண்டி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் மே 11 இந்த ஊர்தி தனது பவனியைத் தொடங்கியிருந்தது.

இந்த ஊர்திபவனி அங்கிருந்து மட்டக்களப்பு திருகோணமலை ஊடாக முல்லைத்தீவை வந்தடைந்து வவுனியா மன்னார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கும் சென்று தமிழ் இனப்படுகொலைகள் இடம்பெற்ற இடங்களில் அஞ்சலி செலுத்திய பின்னர் முள்ளிவாக்கால் நினைவு முற்றத்தைவந்தடைந்துள்ளது.






காலைக்கதிர்
Kalaikkathir

# சட்ட விரோத மரக்கடத்தலின்போது துப்பாக்கிச் சூடு: சாரதி தப்பியோட்டம் ; பொலிஸ் கான்ஸ்டபிள் காயம்



சட்ட விரோத மரக்கடத்தலோடு தொடர்புடைய சந்தேகநபரான வாகன சாரதியொருவர் தப்பியோடியதோடு, அவ்வேளை ஏற்பட்ட வாகன மோதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்த சம்பவமொன்று புதன்கிழமை அதிகாலை வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

பறயனாளங்குளம் விடே அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, அவர்கள் வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு, சாளம்பன் பகுதியில் சட்ட விரோதமாக மரக்கடத்தலில் ஈடுபடுபவர்களை சுற்றிவளைக்கும் முயன்றுள்ளனர்.

அவ்வேளை சந்தேகத்துக்கிடமான கெப்ரகவாகனமொன்றை நிறுத்துவதற்காக வழிமறித்துள்ளனர். எனினும், குறித்த வாகனம் நிறுத்தப்படாமல், விடே அதிரடிப் படை பொலிஸ் கான்ஸ்டபிள் மீது மோதியதையடுத்து, வாகனம் முன்செல்லவிளைந்தபோது, குறித்த வாகனத்தை நிறுத்துவதற்காக அதன் முன்சக்கரத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அப்போது வாகனத்தின் சாரதி கெப் ஓடிக்கொண்டிருக்கும்போதே கீழே குதித்து தப்பிச் சென்றுள்ளார்.

அதனையடுத்து, குறித்த வாகனம் மற்றும் அதனுள் இருந்த ஏழு பெரிய முதிரை மரக்குற்றிகளும் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டு, ஈச்சங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த வாகன மோதலில் பறயனாளங்குளம் விசேட அதிரடிப்படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சந்திரதிலக என்பவரே காயமடைந்துள்ளார்.

அதனையடுத்து, காயமடைந்தவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, காயங்கள் பாரதூரமானதாக இல்லாத நிலையில் உரிய சிகிச்சையை பெற்றுக்கொண்டதன் பின்னர் அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பறயனாளங்குளம் விடே அதிரடிப்படையினர் மற்றும் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டியில் ஏற்பட்ட விபத்தில் தந்தை, மகன் சாவு: மத்திய மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கைது!

கண்டி, பூவெலிக்கடையில் இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் கண்டி, பூலிக்கடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தந்தை தனது மகனுடன் வீதியைக் கடக்கும்போது ஜீப் வண்டி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் செலுத்திய ஜீப் வண்டியே இவர்களை மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

41 வயதுடைய ஒருவரும் அவரது 11 வயது மகனும் விபத்தில் உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சந்தே கத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குற்றவாளியை விடுவிக்கக் கப்பம் கோரிய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

கல்கிஸை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி நீர்கொழும்பு பிரிவில் பொதுக் கடமைகளுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. புலனாய்வுப் பிரிவினர் பொலிஸ் தலைமையகத்துக்கு வழங்கிய அறிக்கைகளை கருத்திற்கொண்டு அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் பதுங்கியிருக்கும் குற்றக் குழுவைச் சேர்ந்த படோவிட்ட அசங்கவின் நெருங்கிய உறவினரை கைதுசெய்து, அவரை விடுவிக்க கப்பம் கோரியுள்ளார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (5)

# கோட்டாபய கொலை முயற்சி: சிவலிங்கம் ஆரூரன் விடுதலை!



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை படுகொலை செய்ய முயற்சித்த வழக்கின் பிரதிவாதியான சிவலிங்கம் ஆரூரனை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு கொள்ளுப்பிட்டி பித்தல சந்தியில் தற்கொலை குண்டுத் தாக்குதல் மூலம் இந்த கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் பிரதிவாதி வழங்கிய வாக்குமூலம் விருப்பத்துக்கு மாறானது என நீதிமன்றம் கண்டறிந்துள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க தீர்ப்பை வழங்குகையில் குறிப்பிட்டார்.

இதன் விளைவாக, அந்த வாக்குமூலத்தின் பொருத்தத்தை நீதிமன்றம் நிராகரித்தது. (5)

# வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு கனவை நனவாக்க வீடமைப்புத்திட்ட ஏற்பாடு

## மனுஷ நாணயக்கார கூறுகிறார்




வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களின் வீட்டுக் கனவை நனவாக்கும் வகையில் அவர்களுக்கான வீடமைப்புத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து இந்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட வெளிநாடுகளில் வசிக் கும் இலங்கையர்களின் தேவைக்கு ஏற்ப, நகர்ப்புற அடுக்குமாடி குடியிருப்புகளாகவும், கிராமப்புற தனிநபர் வீட்டுத் தொகுதிகளாகவும் இந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதுதவிர தமது காணியில் வீடு கட்டுவதற்கும் இதன் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன.

இதற்கான நிதிப் பங்களிப்பை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வழங்கவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் . தேனுக விதானகமவுடன் இடம்பெற்றதுடன், இதன் போது எதிர்வரும் திங்கட்கிழமை புலம்பெயர் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகள் தொடர்பான கணக்கெடுப்பை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் இந்தத் தகவல்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அனைத்து பிரதேச செயலகங்களில் ஒன்றிணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாகவும் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் கணக்கெடுப்பில் பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்த பின்னர், கட்டப்படும் வீடுகளின் வகைகள், கட்டப்படும் பகுதிகள் அடையாளம் காணப்பட உள்ளன.

அதன் பின்னர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கும் அரசாங்கத்துக்கும் சொந்தமான காணிகளை பயன்படுத்தி வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

தொழில் அமைச்சில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் ஹில்மி அஸீஸ், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (5)

# மன்னார் கிராம சேவகர் உட்பட 11 பேர் கட்டுநாயக்கவில் சி.ஐ.டி.யினரால் கைது

போலி ஆவணங்களை சமர்ப்பித்து ஜோர்ஜியா நாட்டுக்குச் செல்ல முயற்சித்த கிராம உத்தியோகத்தர் ஒருவர் உட்பட ஒன்பது ஆண்களையும் இரண்டு பெண்களையும் சி.ஐ.டி.யின் கட்டுநாயக்க பிரிவின் அதிகாரிகள் குழு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று (புதன்கிழமை) கைது செய்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் 36 வயதுடைய மன்னாரைச் சேர்ந்தவராவார்.

ஏனைய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 31, 36, 33, 34 மற்றும் 22 வயதுடையவர்களாவர்.

இந்த சந்தேக நபர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கட்டுநாயக்க பிரிவின் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)

# வட்டுக்கோட்டையில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் செயலமர்வுக்கு ஏற்பாடுகள்

வடபகுதியில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் முகமாக அது குறித்த விளக்க செயலமர்வு ஒன்று எதிர்வரும் மே 20 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

காலை 10.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரையில் நடைபெறும் இந்த செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வடக்கில் கறுவாச் செய்கையை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்க உரை நிகழ்த்துவார்.

அதனைவிட கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்த செயலமர்வில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவிப்பதுடன், பொதுமக்களின் கேள்விகள், சந்தேகங்களுக்கு பதிலளிப்பார்கள்.

வடபகுதியில் கறுவாச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறை விளக்கங்களும் இங்கு வழங்கப்படுவதுடன், ஆர்வமுள்ளவர்களுக்கு கறுவா கன்றுகளும் இலவசமாக வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் யாரும் இந்த செயலமர்வில் பங்குகொண்டு பயனடைய முடியும் என இதனை ஏற்பாடுசெய்திருக்கும் புவனகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள் நிகழ்ச்சி இணைப்பாளரான ஐங்கரனுடன் 077 062 9013 தொடர்புகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# புகழ்பூத்த பழம்பெரும் பாடகர் டோனி ஹசன் காலமானார்!



பழம்பெரும் பாடகர் டோனி ஹசன் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 73.

டோனி ஹசனின் உடல் நேற்று (புதன் கிழமை) மாலை மாளிகாவத்தை முஸ்லிம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (5)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 14 ஆண்டுகளில் சாதித்தது என்ன?

தனித் தமிழ் நாட்டுக்கான ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவடைந்து 14 ஆண்டுகளாகிவிட்டன. அந்தப் போர் மிகச் சுலபமாக முடிவடைந்துவிடவில்லை. மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தியது. வரலாற்றில் இதற்கு முன்னர் ஒருபோதும் இல்லாத வெறித்தனம் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட போராக அது இருந்தது. பன்னாட்டுச் சட்டங்கள் அங்கு தெளிவாக மீறப்பட்டு போர்க் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. இதனை மனித உரிமைகளின் மீறல்களாகவும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகம் பட்டியலிட்டது.

இந்த மிலேச்சத்தனமான போரில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதற்கு நம்பகமான ஆதாரங்கள் இருப்பதாக ஐ.நா. கூறியிருக்கிறது. அரச ஆவணங்களின்படி காணாமற்போயிருக்கும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுமே கொல்லப்பட்டிருக்கலாம் என்கிறது தமிழர் தரப்பு. ஆனால், இதுவரையில் நீதியான ஒரு கணக்கெடுப்பும் அது தொடர்பில் நடத்தப்படவில்லை.

கடந்த 14 ஆண்டுகளாக ஐநா மனித உரிமைகள் பேரவையிலும் பன்னாட்டு அரங்கிலும் தமிழர் தரப்பு பல முன்னகர்வுகளை எடுத்தபோதும் அவற்றினால் நிரந்தர நீதியோ, நிலைமாறுகால நீதியோ, பரிகார நீதியோ எதுவுமே கிடைக்கவில்லை. காணாமற்போனவர்களுக்கு ஏற்பட்ட கதி என்ன என்று ஆயிரக்கணக்கான நாட்களைக் கடந்தும் உறவினர்கள் போராடுகின்றார்கள். ஆனால் பதிலில்லை. காணாமற்போனவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் எவரும் உயிருடன் இல்லை என்று சொல்லும் இலங்கையின் அரசியல் தலைவர்கள், அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்கும் நியாயமான விசாரணைக்கு அனுமதிக்கிறார்கள் இல்லை.

இந்தப் 14 வருடங்களில் தனி நாட்டிலிருந்து இணைப்பாட்சி (சமஷ்டி), பின்னர் அதிலிருந்து 13ஆவது திருத்தம் என்று அரசியல் தீர்வு கீழிறங்கி வந்திருக்கிறதே தவிர உருப்படியாக எந்தவொரு அடைவும் கிடைக்கவில்லை. இதற்கிடையில் உரிமைப் போராட்டத்தின் தொடர்ச்சி என்று கூறி பல கடையப்புக்களும் முழு அடைப்புக்களுமாகத் அப்பாவித்தமிழ்மக்கள்தொடர்ந்தும்தியாகங்களைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந்தக் காலப் பகுதியில் அரசியல் கட்சிகள் தனித் தனியாகத் தங்களை வளர்த்துக்கொள்வதில் பெற்றிருக்கும் வெற்றியில் கால்வாசியளவுக்குக்கூட அரசியல் தீர்வைப் பெறுவதில் கிட்டவில்லை.

மக்களின் தியாகங்களும் போராளிகளின் தியாகங்களும் அரசியலில் வாக்கு அறுவடைப் பொருட்களாக மாற்றப்பட்டிருக்கின்றனவே தவிர, தீர்வுக்கான அடித்தளங்களாக அல்ல. பௌத்த ஆக்கிரமிப்பைத் தடுக்க முடியவில்லை. சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க முடியவில்லை. வடக்கு கிழக்கில் இனப் பரம்பலை மாற்றும் அரசியலைத்தடுக்கமுடியவில்லை. காணிகளைப்பறிகொடுப்பதைத் தவிர்க்க முடியவில்லை. ஆனால் இவை எல்லாவற்றையும் தடுத்து நிறுத்துவோம் என்று இன்னும் அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். செய்யவும் போகிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்போது முள்ளிவாய்க்காலில் ஆகுதியாகிய ஆன்மாக்கள் நிம்மதியாக இருக்குமா? அந்த மண்ணில் சென்று இவர்கள் என்ன அத்மபலத்தைக் கோரி நிற்கப்போகிறார்கள்?

# உள்ளூர் விளையாட்டுப் பொருளாதார எழுச்சி மூலம் நாட்டின் அபிவிருத்திச் சவாலை வெற்றிகொள்ளவாம்

**பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு**



உள்ளூர் விளையாட்டுப்பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி சவாலை வெற்றிகொள்ள முடியும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புஅமைச்சர்பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஒருநாடுஎன்றரீதியில்சகல சவால்களையும் முறியடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் விளையாட்டுவீரர்கள்அதற்குசிறப்பான பங்களிப்பை வழங்க முடியும் எனவும் அமைச்சர் கூறினார்.

2020 ஆம் ஆண்டில் ஜப்பான் டோக்கியோவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்ற தினேஷ் பிரியந்தவிற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால்வழங்கப்பட்ட வீட்டுக்கான உரிமைப் பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர்பிரசன்னரணதுங்க மேற்கண்டவாறுதெரிவித்தார்.

நாட்டிற்குப் புகழைக் கொண்டு வந்த தினேஷ் பிரியந்தவிற்கு, அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அறிவுறுத்தலின்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையால் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி கொம்பஞ்சாவீதியிலுள்ள மெட்ரோ ஹோம்ஸ் வீடமைப்புத் திட்டத்தில் புதிய வீடொன்று கையளிக்கப்பட்டது.

இந்த வீட்டின் பெறுமதி 14.2 மில்லியன் ரூபா. இது இரண்டு அறைகள் கொண்ட 764 சதுர அடி வீடு.

விளையாட்டு வீரர் தினேஷ் பிரியந்த் திருமணமாகி 3 குழந்தைகளின் தந்தை ஆவார். அவரது கிராமம் அனுராதபுரம் இப்பலோகம ஆகும். அவரது விளையாட்டு நடவடிக்கைகளின் வசதிக்காக இந்த வீடு வழங்கப்பட்டுள்ளது.

வீரர் தினேஷ் பிரியந்த தனது தாயகத்திற்காக மேலும் பல சர்வதேச வெற்றிகளை பெற்றுத் தந்துள்ளார்.

அதாவது, 2016 ஆம் ஆண்டுபிரேசிலில்நடைபெற்ற பாராஒலிம்பிக்போட்டியில்ஈட்டி எறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கம், 2017 ஆம் ஆண்டுலண்டனில்நடைபெற்ற உலகதடகளப்போட்டியில்ஈட்டி எறிதல்போட்டியில் வெள்ளிப் பதக்கம், ஆசிய தடகளப் போட்டியில் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம்,

2018 இல் இந்தோனேசியாவில் நடைபெற்ற மற்றும் 2019இல்டுபாயில்நடைபெற்ற உலக தடகளப் போட்டிகள். விளையாட்டுப் போட்டிகளின் ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம்போன்றவை.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவிக்கையில் :-

வாழ்க்கையில் ஒரு நபருக்குநம்பிக்கையும்சுயமரியாதையும்மிகவும்முக்கியம். அதனை விளையாட்டின் மூலம் மிக எளிதாக செய்துவிட முடியும். விளையாட்டின் ஊடாக ஒழுக்கமும் சுயகட்டுப்பாடும் உள்ள மனிதர்களை இந்த உலகத்தில் உருவாக்க முடியும். உங்கள் இலக்குகள் விளையாட்டை வெல்வது, புள்ளிகளைப் பெறுவது, சிறந்த வீரராக இருப்பது, இந்த இலக்குகளை அடைய முடிந்தால், நாம் செய்யும் எல்லாவற்றிலும் நம் தன்னம்பிக்கையை அதிகரிக்க முடியும்.

இன்றைய குழந்தைகள் டேப்லெட், கேம் இணையத்தில் உலாவுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர், மேலும்விளையாட் டுக்களை விளையாடுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. உலகை வெல்ல தொழில்நுட்பம் இன்றியமையாதது. ஆனால் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு விளையாட்டு அவசியம். விளையாட்டு மனிதனின் சுயமரியாதையை அதிகரிக்கும்.

கொடுக்கல் வாங்கல் மற் றும், தடைகளை எதிர்கொண்டு எதிர்காலத்தை நம்பிக்கையு டன் பார்க்கும் மனிதனைப் பெற்றெடுக்கவும். அப்படிப்பட்டவர்களால் இந்த உலகத்தையே வெல்ல முடியும்.எனவே,தொழில்நுட்பத்தை விட விளையாட்டில் அதிக கவனம்செலுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். என்று அமைச்சர் கூறினார். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பெரும் துயர் நிகழ்ந்த தினத்தில் தொல்லியல் ஆக்கிரமிப்புக்கு நாள் குறிப்பது இனதுரோதம்

**சந்திரகுமார் காட்டம்**



கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் அமைந்திருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் (உருத்திரபுரதீஸ்வரர்) ஆலயத்தில் மே - 18 தொல்பொருட்திணைக்களம் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டிப்பதானது இனதுரோதத்தின் உச்சமாகவே நோக்கப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு பெரும் துயர் நிகழ்ந்த ஒரு தினத்தில் தொல்லியல் திணைக்களமும் தனது நடவடிக்கைக்கு நாள் குறித்திருப்பது கண்டனத்திற்குரியது எனத் தெரிவித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :

நீண்டகால வரலாற்றைக் கொண்ட ஆலயத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அது சமூக நெருக்கடியையே உண்டாக்கும். நாட்டில் அமைதியையும் சமூக ஒருங்கிணைவையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவற்றைச் சிதைக்கும் விதமாக அரசாங்கமே நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனால் நாட்டுக்கே பாதிப்புகள் ஏற்படும்.

அத்துடன் இந்த நடவடிக்கை யுத்தத்தில் கொல்லப்பட்டோரை நினைவு கொள் ளும் 18.05.2023 அன்று நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பது திட்டமிட்ட ரீதியில் சமூக நெருக்கடியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுவதாகவே தெரிகிறது. நாட்டில் அமைதிச்சூழலை உருவாக்கி, பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டு, பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுக்க முயற்சிக்கும் தாங்கள், இது தொடர்பாக உடனடியாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டு, இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏற்கனவே வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிலைகளை அமைப்பது, விகாரைகளைக் கட்டுவது என்றவிதமாகத் தொல்பொருட்திணைக்களத்தால் பொருத்தமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் தொல்பொருட் திணைக்களம் என்ற பெயரைக் கேட்டாலே தமிழ், முஸ்லிம் மக்கள் கலவரமடையும் நிலை உருவாகியுள்ளது.

இன்று நாட்டுக்குத் தேவையாக இருப்பது அமைதியும் அரசியற் தீர்வும் பொருளாதார மீட்சியுமே. அதற்குரிய துறைகள் சிறப்பாக, துரிதமாகச் செயற்பட வேண்டும். பிரச்சினைகளை உருவாக்கி, சமூகச் சிதைவை உண்டாக்கும் திணைக்கமல்ல. இந்த நாட்டில் மாற்றங்களைக் காண விளையும் விதமாக நாம் செயற்படுவோம்.

அதற்கான வழிவகைளை தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெரோம் நாடு திரும்பியதும் உடன் கைதுசெய்யப்படுவார்

**பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு**

மதநிந்தனை குற்றச்சாட்டின் கீழ் சிஐடியினரின் விசாரணையை எதிர் கொண்டுள்ள போதகர் ஜெரோம் பெர்ணாண்டோ நாடு திரும்பியதும் உடனடியாக கைது செய்யப்படுவார் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் பேச்சாளர் நிகாதல்டுவ இதனைத் தெரிவித்துள்ளதுடன் ஜெரோம் பெர்ணாண்டோவிற்கு எதிராக நீதிமன்றம் பயணத்தடையை பிறப்பித்துள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிஐடியினருக்கு ஜெரோம் பெர்ணாண்டோ தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் செவ்வாய்க்கிழமை சிஐடியினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றம் தனிநபருக்கு எதிராக பயணத்தடைவிதித்தால் அவர் நாட்டிலிருந்து வெளியேற முடியாது நாடு திரும்பியவுடன் அவரை கைதுசெய்யலாம் எனவும் பொலிஸ்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# சப்ரகமுவ மாகாண ஆளுநராக நவீன்?



ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார்.

தற்போதைய ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ வெளிநாடு சென்றிருப்பதால், அவர் நாடு திரும்பிய பின்னர் புதிய ஆளுநர் நியமனம் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

நான்கு மாகாணங்களுக்கான ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருந்தார். இதன்படி மூன்று மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் இன்று நியமிக்கப்பட்டனர். (02)

# பொரளையில் இளைஞன் குத்திக் கொலை

பொரளை, சிறிசர உயன பகுதியில் வீடொன்றினுள் 28 வயதுடைய இளைஞன் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட இளைஞன் தங்கியிருந்த வீட்டிற்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களில் இருந்து பெறப்பட்ட காட்சிகளில் சந்தேகநபர்கள் சம்பவ இடத்திற்கு வந்த பதிவுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# யாழ்ப்பாணம் நாகர்கோவிலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு அஞ்சலி

யாழ். நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் நினைவாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் நினைவு அஞ்சலி நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வு நாகர் கோவில் - மகாவித்தியாலயத்தின் முன்பாக நேற்று (புதன்கிழமை) காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் முன்னணியின் மகளிர் அணி தலைவி வாசுகி சுதாகரன் உட்பட்ட முன்னணி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



இலங்கை விமானப்படையினரால் கடந்த 22.09.1995 அன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 21 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (5)

# மொட்டுவினரைப் பாதுகாப்பதால் ரணிலே ஜனாதிபதி வேட்பாளராம்

**- ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது**



'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டு எம்.பிக்களை நல்ல முறையில் பாதுகாத்துக்கொண்டுபோகின்றார். இதனால் ரணிலையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டுக் கட்சியினர் விரும்புகின்றனர்'- என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'மொட்டுக் கட்சி எம்.பிக்களுக்குத் தேர்தலில் விருப்பமில்லை. இவர்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவர்களை நல்ல முறையில் பாதுகாத்துக்கொண்டு போகின்றார். இதனால் ரணிலையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டுக் கட்சியினர் விரும்புகின்றனர்.

நாம் எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவையே வேட்பாளராக நிறுத்துவோம். இதில் மாற்றமில்லை. அவரே ஜனாதிபதியாகத் தெரிவாவார்.' - என்றார். (02)

# மகிந்தவுக்கு எதிரான பயணத்தடை நீக்கம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடை முழுமையாக நீக்கி கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் காஞ்சன ஜயரத்ன ஆகியோருக்கும் வெளிநாட்டு பயணத்தடை நீக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மே 9 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழுவினருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 04

# தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராக கப்ரால் நியமனம்

தேசிய சேமிப்பு வங்கியின் (NSB) புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ கப்ரால் இன்று தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். ஜனாதிபதி சட்டத்தரணியான ஹர்ஷ கப்ரால் அறிவுசார் சொத்துசட்டம், நிறுவனசட்டம், வணிகச் சட்டம், பாதுகாப்புச் சட்டங்கள், சர்வதேச வர்த்தகச் சட்டம் ஆகிய துறைகளில் முப்பத்தைந்து (35) வருட அனுபவம் கொண்டவர். 04

### ஐஸ் போதைப்பொருள் விநியோக வலையமைப்பு:

# சிறைக் காவலர் உள்ளிட்ட 11 பேர் கூண்டோடு கைது

ஐஸ் போதைப்பொருள் விநியோக வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக்கூறப்படும் சிறைச்சாலை சிறைக்காவலர் உட்பட 11 பேருடன் 25 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கம்பஹா தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மினுவாங்கொடைப் பகுதியில் போதைப்பொருள் விநியோகம் செய்த ஹோட்டல் முகாமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து கிடைத்த தகவலின்படி, உக்கல்பட பகுதியில் ஐஸ் போதைப்பொருள் பெறச் சென்ற 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த தகவலின் பிரகாரம், ஹோட்டல் முகாமையாளருக்கு போதைப்பொருள் வழங்கியதாக கூறப்படும் ராகம பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், ராகம பகுதியைச் சேர்ந்த நபரிடம் விசாரணை நடத்தியபோது, சிறைச்சாலை அதிகாரி ஒருவர் போதைப்பொருள் கொடுப்பது தெரியவந்தது.

அதன்படி, அந்த சிறைச்சாலையின் இரண்டாம் வகுப்பு சிறைக் காவலர் கம்பஹா, கிரிதிவிட்ட பகுதிக்கு அழைத்து வரப்பட்டு, அவரும் கைது செய்யப்பட்ட போது, அவர் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடவத்தை பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடையவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (02)



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். இந்து பக்தர்களின் களைப்பை தணித்த பிக்கு






புனித கதிர்காம யாத்திரை செல்லும் பக்த அடியார்களின் பயணக் களைப்பைத் தீர்க்கும் வகையில் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையிலான குழுவினர் அவர்களுக்கு உணவு வழங்கியுள்ளனர்.

கதிர்காம உற்சவத்தில் பங்கேற்கும்நோக்கில்பாதயாத்திரையாகச் செல்லும் யாழ்ப்பாண பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் இந்து பக்தர்கள் நேற்று (புதன்கிழமை) புல்மோடையைசென்றடைந்தனர்.

யாத்திரிகளின் பயணக் களைப்பை நீக்கும் நோக்கில் அரிமலை வன ஆராமயவின் ஸ்தாபகர் வணக்கத்துக்குரிய பணமுரே திலகவன்ஸ தேரர் தலைமையிலான சிங்கள மற்றும் தமிழர்களின் ஒத்துழைப்புடன் உணவு வழங்கப்பட்டுள்ளது.





அரிசி மல விஹாரையை அண்டிய பகுதியில் நேற்று காலை உணவு மற்றும் தேநீர் வழங்கப்பட்டுள்ளது. (5)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் மக்களை ஒன்றுதிரளுமாறு அழைப்பு

## விடுத்தார் கோவிந்தன் கருணாகரன்

தமிழ்தேசிய கூட்டமைப்பின் 'முள்ளிவாய்கால் மே 18 தமிழின படுகொலையின் நினைவேந்தல்' மட்டக்களப்பு-கல்லடிகடற்கரையில் இன்று (வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் மக்கள் அனைவரும் ஒன்று கூடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு - வாவிகரை வீதியிலுள்ள நாடளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு கோரிக்கையை விடுத்துள்ளார்.

'மே 18 ஒட்டிய ஒரு வாரம் முள்ளிவாய்க்கால்தினமானவாரம் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் துக்கமான கரி வாரமாக தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு நினைவு கூர்ந்துவரும் இந்த வேளையிலே இலங்கை அரசு தன்னுடைய போர் வெற்றியைக் கொண்டாடி வருகின்றது.

2009 மே 18 காலப்பகுதியில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பொதுமக்கள் இந்த வாரத்தில் கொல்லப்பட்டனர் என முன்னாள் மன்னார் ஆயர் யோசப் இராயப்பு தகவல் வெளியிட்டார். கிட்டத்தட்ட இந்தபோர்தொடங்கியகாலமிருந்து 3 லட்சம் மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டிருக்கின்றனர். அதில் பல தலைவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.



இருந்தபோதும் இந்த முள்ளிவாய்க்கால் வாரத்தை நாங்கள் வருடா வருடம் நினைவு கூர்ந்து வருகின்றோம். அதனடிப்படையில் இந்த ஆண்டும் நினைவேந்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் சிங்கள பேரினவாத இனவாதியான சரத்வீரசேகர இரண்டு தினங்களுக்கு முன்னர் இந்த நினைவு தினத்தையிட்டு இடம்பெறும் ஊர்தி பவனி மற்றும் விளக்கேற்றல்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்கள் போன்றவை எவை எதற்காக என்ற கேள்வி எழுப்பியிருந்தார்.

உண்மையிலே எங்கள் மக் கள் எங்களுக்காக உயிர் நீத்தவர்களுக்கு நினைவு கூற வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது அந்தவகையில் நாங்களும் ஒவ்வொரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த தினத்தில் அவர்களை நினைவு கூர்ந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த இரண்டு வருடங்கள் கொவிட்டினால் அலுவலகங்கள் வீடுகளில் நினைவு கூர்ந்தோம். இருந்தபோதும் இந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில்மட்டக்களப்புஅம்பாறை பிராந்தியம் மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் இன்று 18 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நினைவு கூற ஏற்பாடு செய்துள்ளோம்.

எனவே இந்த நினைவேந் தலில்இனமதசமயவேறுபாடுகளின்றி ஓர் உணர்வு பூர்வமாகத் தமிழ் பேசும் மனிதனாக - தமிழினத்திற்காக - தமிழினத்தின் உரிமைக்காகபோராடிய இனமாக - இதை நினைவு கூறுவதற்க அனைவரும்ஒத்துழைத்துகல்லடி கடற்கரைக்குமக்கள்அனைவரும் ஒன்று கூடுமாறு' கோரிக்கை விடுத்துள்ளார். (5)

# தமிழ் மக்கள் கொத்தாக கொல்லப்பட்டமைக்கு பிள்ளையார் சுழி போட்டவர்தான் பிள்ளையான்

## மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் லவக்குமார் சாட்டை

இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), முள்ளிவாய்க்காலில்தமிழ்மக்கள்கொல்லப்பட்டதற்கு பிள்ளையார் சுழி போட்டசூத்திரதாரியாகக்காணப்படுகின்றார்எனதமிழர்தாயகமக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வி.லவக்குமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை, விநாயபுரம்பகுதியில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 'எங்களது எண்ணற்ற தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில்கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டதற்கு முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவர் தான் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்).

இவர் வாழைச்சேனை பேத்தாளை மண்ணைச் சேர்ந்தவர். தற்போது இராஜாங்க அமைச்சராகவும், அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் இருக்கின்றார்.



யுதத்தின் போது நாங்கள் எமது சகல உரிமைகளையும்இழந்துள்ளோம். ஆனால் தற்போதுஎழுந்துநிற்கின்றோம். - என்றார். (5)

# 36,000க்கும் அதிகமான சுற்றுலாவிகள் இரு வாரங்களில் இலங்கை வருகை

இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் 36 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு

வருகைதந்துள்ளனர்என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால்வெளியிடப்பட்ட சமீபத்தியதரவுகளின்படி, இம்மாதத்தில் மட்டும் இதுவரை 36 ஆயிரத்து 100 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இவ்வாறு வந்த சுற்றுலா பயணிகளில் இந்தியர்களே அதிகம் என்றும் மொத்தமாக 9 ஆயிரத்து 323 இந்தியர்கள்

இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

மேலும்ரஷ்யாவிலிருந்து 3,686சுற்றுலாப்பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 2,523 பேரும், ஜேர்மனியில் இருந்து 2,179 பேரும் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

இதேநேரம் அவுஸ்ரேலியாவிலிருந்து 2,075 பேரும், சீனாவில் இருந்து 1,915 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதம் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதேவேளை ஏப்ரல் மாதத்தில் மொத்தம் 105,498 சுற்றுலாப்பயணிகள்வந்தனர் எனசுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு குருதிக்கொடை வழங்கல்!



முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களின் நினைவாக குருதிக்கொடை வழங்கும் நிகழ்வொன்று நடைபெற்றுள்ளது.

இந்த குருதிக்கொடை வழங்கும்நிகழ்வுஇளைஞர்கள் மற்றும் நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் புதுகுடியிருப்பு ஆதார வைத்தியசாலைமண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டுமுள்ளிவாய்க்காலில் உயிரிழந்தமக்கள்நினைவாக இந்த குருதிக்கொடை நிகழ்வு முன் னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள இளைஞர்கள்தாமாகமுன்வந்து குருதிக்கொடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணஅபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்றுயாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று (புதன்கிழமை) காலை 8.30 மணியளவில் நல்லூர் பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாம் ஆரம்பித்தது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர்அ.சிவபாலசுந்தரன், நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் நிர்வாகிகள், அபிவிருத்தி உதிரக்கொடையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (5)




# Centre for Digital Epidemiology (CoDE), Faculty of Medicine, University of Jaffna.

**Temporary appointment**

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post for the Centre for Digital Epidemiology, Faculty of Medicine, University of Jaffna.

1. Centre Manager (01 post)

Qualifications, experience and requirements:

o A Bachelor's degree in Business Administration/Commerce or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
o Minimum 03 years post qualifying experience in health related project management in public service/ corporation/statutory board or reputed institution.
o Ability to prepare the project's budgets, manage the team, maintain the official documents, organize the stakeholders' meetings, manage multiple tasks and meet the demands of a fast paced environment with changing priorities.

**Duties & Responsibilities:**

o Overseeing day to day operations.
o Developing and implementing policies for efficient operations.
o Managing Staff.
o Monitoring performance though key performance indicators.
o Communicating with stakeholders.
o Ensuring compliance with all relevant laws, regulations as well as any internal policies or procedures.
o Managing budgets.
o Planning and executing programmes.

**Remuneration: A monthly salary of LKR 67, 400.00 will be paid**

**General note**

o All selected candidate will be appointed on full-time basis for one year.
o Candidate should possess excellent language skills in Tamil and English
o Should be a citizen of Sri Lanka.
o Age should be not less than 18 years and not more than 35 years.
o All selected candidates will become a contributor to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETF respectively.

The Application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach **Deputy Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.** Applicants are requested to send the scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before Friday, 26 th of May 2023. Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

For further details, please refer to the University of Jaffna website - www.jfn.ac.lk

Registrar
08.05.2023

# ஆஸியில் பேருந்து விபத்து

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில்,பேருந்தில்பயணித்தமாணவர்கள் பலர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.



பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தும் பின்னால் வந்த பாரவூர்தியும் மோதியதாலே குறித்த



விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த விபத்து செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்தில்45பள்ளிமாணவர்கள்பயணித்ததாகவும், விபத்தில் 5 - 11 வயது வரையான 9 மாணவர்கள் காயமடைந்துள்ளதாகவும், காயங்களுக்குள்ளான மாணவர்கள் அவசர அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரவூர்தியின் சாரதி பாரவூர்தியை வேகமாகச் செலுத்தியமையே விபத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



மியான்மரில் மோச்சா சூறாவளியால் ஏற்பட்ட அழிவுகளை படங்களில் காணலாம்.

# தாய்லாந்தில் இராணுவ ஆட்சிக்கு 9 ஆண்டின் பின் முடிவுக்கு வந்தது

தாய்லாந்தில் மன்னர் ஆட்சி மற்றும் இராணுவ ஆட்சிக்கு எதிராகத்தொடர்ந்தும்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவந்தநிலையில் 9 ஆண்டுகளுக்குப் பின்னர், இராணுவ ஆட்சிக்கு முடிவுக்கு வந்துள்ளது.

2014ஆம்ஆண்டுதாய்லாந்தில் இராணுவம்ஆட்சியைக்கைப்பற்றி ஜனநாயகஆட்சியைக்கலைத்தது.

இந்நிலையில், இராணுவ ஆட்சி மற்றும் மன்னர் முறைக்கு எதிராக தாய்லாந்து இளைஞர்கள் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

போராட்டங்களுக்கு மத்தியில் தாய்லாந்தில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டு மே14 வாக்களிப்பு நடந்தது.

தேர்தலில் இராணுவத்திற்கு ஆதரவான கட்சிக்கும் எதிர்க்கட்சிகளாகபார்வர்ட்,பியூதாய் கட்சிகளுக்குமிடையே பலத்த



போட்டி நிலவியது.

இதில், பியூதாய் கட்சி 141 இடங்களிலும்இ பார்வர்ட் கட்சி 11 இடங்களிலும் வெற்றி பெற்றதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், 9 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த நாட்டில்இராணுவஆட்சிமுடிவுக்கு வந்துள்ளது.

# 11 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்கின்றது வோடபோன் நிறுவனம்

இங்கிலாந்தை தலைமையகமாகத் கொண்டு இயங்கும் வோடபோன் நிறுவனமானது தமது நிறுவனத்தில்பணியாற்றும்11,000பேரைபணிநீக்கம் செய்யவுள்ளதாகத் திடீர் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.




சமீபகாலமாகஉலகளாவியபொருளாதாரநெருக்கடி காரணமாக பல நிறுவனங்களும் நிதி நெருக்கடியில் உள்ள நிலையில் பணியாளர்கள் பலரை பணிநீக்கம் செய்து வருகின்றன. அந்த வகையில் வோடபோன் நிறுவனமும் 11,000 பணியாளர்களைப் பணி நீக்கம் செய்யப்போவதாகஅறிவித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

கூகிள், அமேசான், ஐபிஎம் உள்ளிட்ட பல பிரபலமானநிறுவனங்களைத்தொடர்ந்துவோடபோன் நிறுவனமும் ஆயிரக்கணக்கில் பணியாளர்களை நீக்க உள்ளமையானது பலரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியப் பெருங் கடலில் கவிழ்ந்தது சீன மீன்பிடி கப்பல்

## 9 பேர் மாயம்

39பணியாளர்களுடன்சீன மீன்பிடிக்கப்பல்ஒன்றுஇந்தியப் பெருங்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து, உயிர் பிழைத் தவர்களைத் தேடுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார்.

ஷான்டாங்மாகாணத்தைச் சேர்ந்ததனியார்நிறுவனத்துக்குச் சொந்தமான லு பெங் யுவான் யு என்ற மீன்பிடிக் கப்பல் செவ்வாய்க்கிழமை அதிகாலை கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.குறித்த மீன்பிடிக் கப்பலில் 17 சீனப் பணியாளர்கள், 17 இந்தோனேசியர்கள் மற்றும் 5 பிலிப்பைன்ஸ்ச் நாட்டை சேர்ந்தவர்கள் இருந்தனர் எனவும்தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஆஸ்திரேலியா, இலங்கை, மாலைதீவு, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் பிற நாடுகளில் உள்ள தமது தூதரகங்கள் மூலம் தேடுதல் மற்றும்மீட்புநடவடிக்கைகளை ஒருங்கிணைந்து வருவதாகச் சீனாவின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது



# பாவனை அற்ற கணக்குகளை அகற்றுகின்றது கூகுள் நிறுவனம்

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பாவிக்கப் படாமல்இருக்கும்கூகுள்கணக்குகளைஅகற்றுவதற்கு கூகுள் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

டிசம்பர் 2022 வரையில், பாவிக்கப்படாமல் இருக்கும் கணக்குகளை நீக்குவதற்கே கூகுள் முடிவு செய்துள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தடுக்கும் வகையிலேயே நிறுவனம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்ததுஇரண்டுவருடங்களாககூகிள்கணக்கைப் பயன்படுத்தாமலோ அல்லது உள்நுழையாமலோ இருந்தால், கணக்கு அகற்றப்பட்டு, அதனோடு இணைந்த வசதிகள் உள்ளடக்கமும் நீக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானமானது, தனிப்பட்ட கூகிள் கணக்குகளுக்கு மட்டுமே பொருந்தும் பாடசாலைகள், வங்கிகள், வணிகங்கள் போன்ற நிறுவனங்களுக்குப் பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கணக்குகளை நீக்குவதற்கு முன்னர், நேற்று முதல் மின்னஞ்சல்களுக்கு அறிவிப்புக்களும் Google ஆல் விடுக்கப்படுகின்றன.

# பத்தில் ஒரு பிள்ளையால் எழுத முடியாமல் தவிப்பு

## தென்னாபிரிக்காவில் இந்த அவலம்

தென்னாப்பிரிக்காவில் பத்து வயதிற்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளில் 10 பேரில் 8 பேர் எழுத முடியாமல் தவிக்கின்றனர் என்று சர்வதேச ஆய்வு ஒன்று கண்டறிந்துள்ளது.

சர்வதேசவாசிப்புஎழுத்தறிவு ஆய்வுக் குழுவினால் கடந்த 2021 ஆம்ஆண்டில்உலகளாவியரீதியில் 400,000மாணவர்களின்விவரங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 57 நாடுகளில் தென்னாப்பிரிக்கா கடைசி இடத்தைப் பிடித்தது.

தென்னாப்பிரிக்க குழந்தை களிடையே 2016 78 சதவீதத்தில் இருந்த கல்வியறிவின்ம 2021இல் 81% ஆக உயர்ந்துள்ளது.

கொவிட் -19 தொற்று நோய்களின் போது பள்ளிகள் மூடப்பட்டதாலே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தென்னாப்பிரிக்க நாட்டின் கல்வி அமைச்சர் அன்ஜீ மொற்சிக (Angie Motshekga) குற்றஞ்சாட்டினார்.

வறுமை, சமத்துவமின்மை மற்றும் போதிய உட்கட்டமைப்பு வசதிகளின்மையே நாட்டின் கல்வி வளர்ச்சியில் சவால்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும்,தென்னாப்பிரிக்காவின் பெரும்பாலான பள்ளிகள் வாய்வழிசெயல்திறனில்மட்டுமே அதிக கவனம் செலுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்ககுழந்தைகளில் 81 சதவீதமானோர் அந்தநாட்டின் 11 அதிகாரபூர்வ மொழிகளில் எதையும்புரிந்துகொள்ளமுடியாத நிலையில் இருப்பதாக குறித்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மியான்மரில் மோச்சா சூறாவளி அதில் சிக்கிப் பலர் உயிரிழப்பு



கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) மியான்மரை தாக்கிய மோச்சா சூறாவளியில்சிக்கிஏறக்குறைய40பேர் இறந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

மோச்சா சூறாவளி இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட வலிமையான புயல்களில் ஒன்றாகும் எனவும், சுமார் 209 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது எனவும்தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலானஉறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள் மியான்மாரின் ரக்கைன், மத்தியமியான்மார்,சாகிங் மக்வேபிராந்தியங்களிலும் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் 21 பேர்உயிரிழந்தனர்என்று இராணுவம் அறிவித் துள்ளது.

குறித்தசூறாவளியின் தாக்கத் தால், நூற்றுக் கணக்கானவீடுகள்மற்றும் தங்குமிடங்கள் இடிந்து விழுந்துள்ளதாகவும், நாட்டில் தகவல்தொடர்புகளை மேற்கொள்வதற்குக்கடினமாகஉள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சூறாவளியில்சிக்கியமக்கள்பலரைக் காணவில்லை எனவும், இதனால் இறப்புக்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சூறாவளியின் தாக்கத்தால் மியான்மாரில் வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் அதிபர் சர்க்கோசி மேன்முறையீட்டில் தோல்வி



பிரான்ஸ் நாட்டின் முன்னாள் அதிபர் நிக்கோலஸ் சர்கோசி, தனக்கெதிரான ஊழல் குற்றச்சாட்டில் விதித்த சிறைத் தண்டனைக்கு எதிராக மேற்கொண்ட மேல்முறையீட்டில் தோல்வியடைந்தார்.

இருப்பினும், பாரிஸ்மேல்முறையீட்டு நீதிமன்றம், அவர் சிறைத் தண்டனை அனுபவிப்பதற்குப் பதிலாக, வீட்டில் ஒரு குறியினை அணிந்துகொண்டு தனது நேரத்தில் ஊழியம்செய்யலாம் எனத்தீர்ப்பளித்தது.

பணியில் இருந்து இருவரை இடைநீக்கம் செய்ததற்காகவும், ஒரு தனி வழக்கில் நீதிபதி மீதுசெல்வாக்குசெலுத்த முயன்றதற்காகவும், 2021இல்சார்க்கோசிக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

67 வயதான இவர், சிறைத்தண்டனை பெற்ற முதல் பிரான்ஸ் முன்னாள்அதிபர்என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.05.2023இல் வெளியிடப்பெற்றது.
இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 03 புதன்கிழமை 17.05.2023 கதிர் 60

## மாற்றங்கள் இயல்பானவை

ஆட்சி நடத்துகையில் மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கும் என்று ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார். குருநாகலில் இன்று காலை செய்தியாளர்கள் மத்தியில் ஆளுநர்கள் மாற்றம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நாட்களில் ஆளுநர்களை நீக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அது பொது–நிர்வாகத்தின் ஒரு பகுதியாகும். அரசமைப்புச் சட்டத்திற்கு அமைவாக அந்த மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் அரசமைப்பில் ஜனாதிபதிக்கு ஆளுநர்களை மாற்றியமைப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே அதற்கு அமைவாக உரிய தீர்மானங்களை அவர் எடுத்துள்ளார் – என்றார்.

# முழு ஒத்துழைப்பு வழங்குவார் என ஜனாதிபதி ரணில் உறுதியளித்தார்

## பதவி ஏற்ற பின்னர் வடக்கு ஆளுநர் மகிழ்ச்சி தெரிவிப்பு



வடக்கு மக்களுக்கு தேவையானவற்றை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளார் எனத் தெரிவித்தார் வடமாகாணத்தின் புதிய ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றுவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் கூறினார்.

வடமாகாணத்தின் புதிய ஆளுநராக இன்றைதினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியேறும்போது செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மக்களுக்கு தேவையானவற்றை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஒத்துழைப்பை அர்ப்பணிப்புடன் வழங்குவார் என்று உறுதயளித்துள்ளார்.

இவ்விதமான தாரளமான மனதுடைய ஜனாதிபதியின் கருத்துக்களை இட்டு நான் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

வடக்குமக்களின்தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கு தேவையான விடயங்கள் தொடர்பில்தொடர்ந்து கலந்துரையாடுவார் எனவும்ஜனாதிபதிகுறிப்பிட்டுள்ளர்—என்றார். மீண்டும் ஆளுநராகப் பதவியேற்றமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதியின் அழைப்பின் பேரில இப்பதவியை ஏற்றுக்கொண்டுள்ளேன். வடக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு வடக்கு மக்கள் பிரதிநிதிகளுடனும் இணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.

அதேநேரம், வடக்கில், சீனா, இந்தியாவின் முதலீடுகள் தொடர்பான முடிவுகள் மத்திய ஆட்சியின் தீர்மானத்திற்கு அமைய முன்னெடுக்கப்படுபவை., அவை தொடர்பில் ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை – என்றார்.

## 3 மாகாண ஆளுநர்களை மட்டும் மாற்றியமை சந்தேகத்துக்குரியது

### யுதுகம் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

தமிழ்த் தரப்புடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கையில் மூன்று மாகாணங்களுக்கான ஆளுநர்கள் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளமை சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளதாக யுதுகம அமைப்பின் ஏற்பாட்டாளர் கெவிந்து குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் இன்று காலை யுதுகம அமைப்பினால் அழைக்கப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று மாகாணங்களுக்கான ஆளுநர்களை மாத்திரம் இராஜினாமச்செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கோரப்பட்டு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தரப்புடன் இந்த நாட்களில் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இந்தத் தருணத்தில்தான் ஆளுநர்களாகப் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே தமிழ்த் தரப்புடனான பேச்சுத்தான் இந்த மாற்றத்திற்குக் காரணமா என்ற சந்தேகம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

நம்பிக்கையின்மை காரணமாகவே மூன்று ஆளுநர்களையும் மாற்றியதாகவும் அறியக்கிடைகின்றது. ஜனாதிபதிக்கு ஆளுநர்கள் மீது நம்பிக்கை அற்றுப்போனமைக்கான காரணம் என்ன வென்பதை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் –என்றார்.

## 3 புதிய ஆளுநர்கள் பதவியேற்பு



மூன்று புதிய ஆளுநர்கள் இன்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் உறுதிமொழியேற்று பதவிப் பொறுப்பைப் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்

## தனிநாடு கேட்ட புலிகளும் பேசி இருக்கிறார்கள் அதுபோன்று நாமும் பேச வேண்டியது எம் கடமை

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவிப்பு



தமிழீழத் தனிநாட்டுக்காகப் போராடிய விடுதலைப் புலிகள்கூடப் பேச்சுக்கான சந்தர்ப்பம் வரும்போது பேசத் தவறவில்லை தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்–யப்பட்ட நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்களுக்குத் தீர்வு காணப் பேசும் சந்தர்ப்பம் வரும்போது பேச வேண்டியது கடமை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேச வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் அவரிடம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகள் 1994, 2001 என்று பேச்சுக்களில் கலந்துகொண்டனர். தமிழ் மக்களின் வாக்குகளால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்ற எங்களுக்கும் அவ்வாறான பொறுப்பும் தார்மீகக் கடமையும் உள்ளது. எமது பிரச்சனை தொடர்பாக நாம் எந்த உலக நாடுகளிடம் பேசச் செல்லும்போதும் அவர்கள் சொல்லும் கருத்து ஆட்சியாளர்களுடன்

2☞

## முழு அடைப்புடன் முள்ளிவாய்க்காலில் நாளை அணிதிரள முன்னணி அழைப்பு

முள்ளிவாய்க்கால் மே 18 தமிழினப் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், சந்தைகள், தனியார் கல்வி நிலையங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், அனைதும் தமது அன்றாடச செயற்பாடுகளை நிறுத்தி நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபடுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு இன்று விடுத்திருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறீலங்கா அரசு தமிழ் மக்கள்மீது மேற்கொண்ட இனவழிப்பு யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களுடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டம் கடந்த 2009 மே 18 ஆம் திகதி மௌனிக்கச் செய்யப்பட்டது. இந்த இனவழிப்பு யுத்தத்தின்போது சுமார் 150,000 வரையான தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

1987 ஆம் ஆண்டு, இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட 13ஆம் திருத்தச்சட்டத்திற்கான வரைபு 1987 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோது, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் 13ஆம் திருத்தச் சட்ட வரைபில் உள்ளடக்கப்பட்ட விடயங்களைத்

2☞

## ஆனல்ட் கைதாகி பிணையில் விடுவிப்பு

யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆனல்ட் பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் ஒருவரைத் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதன் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை 17 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதிக் கிளைக் கூட்டத்திற்கு பின்னர் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது ஆனல்ட் கட்சியின் மற்றொரு உறுப்பினரான பாதிக்கப்பட்டவரைத் தாக்கினார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக இமானுவேல் ஆனல்ட் தனது சட்டத்தரணியுடன் இன்று காலை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார். அங்கு அவரைக் கைது செய்த பொலிஸார், நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

கைது செய்யப்பட்ட யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வரான இமானுவேல் ஆனல்ட் இன்றைய தினமே நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் சரீரப் பிணையில் விடுவிக்கப் பட்டார். (04)

## காலை முதல் மாலை வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி





மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்று கிளிநொச்சி சுண்டிகுளம் பகுதியில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 வரை இடம்பெற்றது. 250 கிலோ அரிசியில் சுண்டிகுளம் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இந்தக் கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்றது

## உள்நாட்டு இறைவரி அதிகாரிகள் போராட்டம்

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் இன்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் 16 கிளைகளின் பணியாளர்கள் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றனர் என்று உள்நாட்டு இறைவரி சேவை சங்கத்தின் செயலாளர் எச்.ஏ.எல் உதயசிறி தெரிவித்தார்.

ஊழியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, மற்றும் அது தொடர்பான விடயங்களை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2☞

## முழு அடைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுக்கான தொடக்கப்புள்ளியாகக்கூடக் கருதமுடியாது என்பதனைச் சுட்டிக்காட்டி அதனைச் சட்டமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாம் என்று கோரி தமிழ்த் தலைவர்களால் அன்றைய இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதப்பட்டது.

எனினும் அக்கோரிக்கையை முற்றாகப் புறந்தள்ளி தீர்வு என்ற பெயரில் தமிழ் மக்களது விருப்புக்கு மாறாகத் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட 13ஆம் திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்துப் போராடியமையினாலேயே தமிழ் மக்கள் இனவழிப்புச் செய்யப்பட்டிருந்தார்கள். தமிழ்த் தரப்பின் கோரிக்கைகளை முற்றாகப் புறக்கணித்து 1987 நவம்பர் 14 இல் பாராளுமன்றத்தில் 13ஆம் திருத்தமானது சட்டமூலமாக நிறைவேற்றப்பட்டு முழுமையாக நடைமுறையில் உள்ளபோதே மேற்படி இனவழிப்பு அரங்கேற்றப்பட்டது.

உரிமைக்காகப் போராடியமைக்காக இவ்வாறு இனப்படுகொலைக்கு உள்ளாக்கப் பட்ட தமிழ் மக்களை நினைவு கூரவேண்டிய வரலாற்றுக்கடமை அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உண்டும்.

அத்துடன் அவர்கள் எத்தகைய அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்து போராடினார்கள் என்பதும், அக்கோரிக்கைகளை இறுதி வரை கைவிட மறுத்து உறுதியாக நின்றமையினாலுமே இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்ற வரலாற்று உண்மைகள் எமது அடுத்த சந்ததிக்குக் கடத்திச் செல்லப்படல் வேண்டும். அதனூடாக இனப்படுகொலைக் குச் சர்வதேச குற்றவியில் விசாரணையை வலியுறுத்துவதுடன், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வுகளை நிராகரித்துத் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப் பட்ட தீர்வை நோக்கி மக்களை அணிதிரட்டிச் செல்வதும் அவசியக் கடமையாகும்.

அவ்வாறு இனவழிப்பு அரங்கேற்றப் பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் தமிழ் மக்கள் 13ஆம் திருத்தத்தையும், ஒற்றையாட்சியையும் நிராகரித்து, தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிகப்பட்ட அடிப்படையிலான சமஸ்டித் தீர்வை வலியுறுத்தியே சனநாயக வழிமுறையிலான தேர்தல்கள் மூலம் ஆணை வழங்கி வந்துள்ளனர்.

நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து கடந்த 36 ஆண்டுகள் முழுமையாக நடைமுறையில் உள்ள 13ம் திருத்தச் சட்டத்தினை, நடைமுறையில் இல்லாதது போன்று பாசாங்கு செய்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கோருவதானது, அதனைத் தீர்வாக ஏற்றுக்கொள்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைக ளைக் குழிதோண்டிப் புதைக்கும்செயற்பாடாகும். கடந்த 75 வருடங்களாகத் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுவந்த ஒற்றை யாட்சி அரசியல் யாப்பினை 13ஐ நடைமுறைப்படுத்தல் என்னும் பெயரில் நாடாளு மன்றில் வாக்கெடுப்புக்கு விடுவதற்கும், அதனை வடக்குக் கிழக்குத் தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்து அதற்கு அங்கீகாரம் வழங்குவதற்குமான திரைமறைவுச் சதிகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் முள்ளிவாய்க்கால் வரை நடந்தேறிய தியாகங்களுக்குச் செய்யப்படும் துரோகமாகும். 1987 இல் தமிழ் மக்களின் சம்மதமின்றி ஒருதலைப்பட்டசமாகக் திணிக்கப்பட்ட 13 ம் திருத்தச் சட்டத்தை நிராகரித்து, 2009 வரை மேற்கொள்ளப்பட்டிருந்த தியாகம் நிறைந்த உன்னதமான விடுதலைப் போராட்டத்தைத் தவறானதாக சித்தரிக்க முயலும் செயற்பாடுமாகும்.

இச் சதியை மக்களுக்கு அம்பலப் படுத்தி, ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வை வலியுறுத்தி மக்களை அணிதிரட்ட வேண்டிய வரலாற்றுக் கடமை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வை முன்னடுக்கும் ஒவ்வொரு தரப்பினருக்கும் உண்டு.

கீழ்வரும் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் வழமைபோன்று இவ்வாண்டும் மே 18 அன்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் அணிதிரளவேண்டுமென அன்புடன் வேண்டுகின்றோம்.

தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசு மேற்கொண்ட இனப்படுகொலைக்குச் சர்வதேசக் குற்றவியல் விசாரணை நடாத்தப்படல் வேண்டும். பொறுப்புக் கூறல் தொடர்பிலான எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் முற்றாக நிகராரிக்கின்றோம்.

1987 இலேயே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கூடக் கருத முடியாது என்று, அன்றே தமிழ்த் தலைமைகளால் நிராகரிக்கப்பட்டிருந்த 13 ஆம் திருத்தச் சட்டத்தை, ஒருபோதும் தமிழ் மக்களுக்கான தீர்வாகத் திணிக்க முடியாது என்பதையும், ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஸ்ரீலங்காவின் 75 வருடத் தோல்விக்குக் காரணமான ஒற்றையாட்சி அரசியல் யாப்புக் கைவிடப்பட்டு, புதிய அரசியல் யாப்பானது தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரிக்கும் சமஸ்டி யாப்பாக அமைய வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படல் வேண்டும் என்பதுடன் அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுவது நிறுத்தப்படல் வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களைக் கண்டறிய சர்வதேச விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

மேற்படி கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் மே 18 ஆம் திகதி வடக்குக் கிழக்கில் மக்கள் தமது வழமையான நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி முள்ளிவாய்க்கால் மே 18 இனப் படுகொலையை நினைவுகூருமாறு அழைக்கின்றோம்.

அந்தவகையில் வடக்குக் கிழக்கில் உள்ள அனைத்து அரசதிணைக்களங்கள், அரசசார்பற்ற மற் றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், சந்தைகள், தனியார்கல்வி நிலையங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் அனைத்தினதும் அன்றாடச் செயற்பாடுகளை நிறுத்தி நினைவேந்தல் நிகழ்வில் பங்கெடுக்குமாறும்,

நாளை 18.05.2023 வியாழக்கிழமை மே-18 முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல் நிகழ்வுக்கு அனைத்துத் தமிழ் மக்களையும் அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது. (03)

## தனிநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


பேசுங் கள் என்பதுதான். சரியோ பிழையோ ஆட்சியாளர்களு டன் பேச வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உண்டு.

ஜனாதிபதியுடன் மே 9 நடந்த சந்திப்பைத் தொடர்ந்து கடந்த மே 11 அதிகாரபகிர்வு தொடர்பான சந்திப்பு இடம்பெற்றது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரன் வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகத்திற்கான முன்மொழியை முன்வைத்தபோது அதை ஜனாதிபதியும் முன் மொழிந்தார்.

அதை நாங்கள் நிராகரித்தோம் குறித்த கலந்துரையாடலில் மிக முக்கியமான விடயங்கள் பேசப்படவில்லை அதிகார பகிர்வு தொடர்பாக தொட்டுப் பார்க்கப்பட்டது. ஏற்கனவே இலங்கையின் சட்டத்திற்குற் பட்ட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு எல்லா தரப்புக்களாலும் கருத்து முன்வைக்கப்பட்டது. குறித்த தேர்தலை நடத்தினால் அதிலிருந்தாவது தீர்வுக்கான தொடக்கப் புள்ளியைக் காண லாம் என்றுகூடப் பேசப் பட்டது.

அதறற்காகத் தமிழர்க ளுக்கான தீர்வு சமஸ்டி என்பதிலிருந்து விட்டுக் கொடுத்தோ விலகியிருந்தோ பேசவில்லை. முஸ்லீம் கட்சிகள் இணைக்கப்படவில்லை என் பது தவறானது. பேச்சில் அமைச்சர் நஸீர் அகமட் டும் இருந்தார். வடக்குகிழக்கு இணைப்பு என்று வரும்போது முஸ்லீம் மக்களுடன் சேர்ந்தாக வேவரும். அதுதான் கட்சித் தலைவரின் நிலைப்பாடும் - என்றார்.

## தமிழ்நாடு இளைஞர் திருமலையில் நீரில் மூழ்கி இறப்பு



தமிழ்நாட்டிலிருந்து திருகோணமலைக்குச் சுற்றுலா வந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை - அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நண்பர்களுடன் நேற்று அவர் நீராடச் சென்ற போது நீரில் மூழ்கியுள்ளார் என்று பொலிஸ் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்ட அவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தமிழ்நாடு, திருநெல்வேலி, 76/பு சர்க்கரை விநாயகர் வீதியில் வசித்து வரும் கஸ்தூரி ரங்கன் ஜெயசூர்ய (வயது 26) எனத் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

# காரைதீவு பிரதேச செயலக ஏற்பாட்டில் நடமாடும் சேவை

### மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு







காரைதீவு பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுமக்கள் நடமாடும் சேவை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை காரைதீவு பிரதேச செயலக முன்றிலில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நடமாடும் சேவையில் காணி, சமூக சேவைகள் ,சமுர்த்தி, மோட்டார் போக்குவரத்து, திட்டமிடல் ,கலாசாரம், மகளிர் அபிவிருத்தி, தேசிய அடையாள அட்டை, பொலிஸ், தேசிய வீடமைப்பு அதிகார சபை, மின்சார சபை, கமநல சேவைகள் நிலையம், வனவிலங்கு, பதிவாளர் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள், சுகாதாரம் போன்ற திணைக்களம் மற்றும் பிரிவுகள் கலந்து கொண்டு பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் காரைதீவு, மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு தங்களது தீர்க்கப்படாத நீண்ட கால பிரச்சனைகளை முன் வைத்து தீர்வுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் வீ. இராஜகுலேந்திரன், கணக்காளர் ஏ.எல்.எப். ரிம்ஸியா, நிர்வாக உத்தியோகத்தர் ரி. கமலநாதன் நிர்வாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் உட்பட கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை பிரதேச செயலகத்தில் பொது மக்கள் நடமாடும் சேவை





கல்முனை பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொது மக்கள் நடமாடும் சேவை இன்று (புதன்கிழமை) பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் இடம் பெற்றது. இந்த நடமாடும் சேவையில் காணி, சமூக சேவைகள் ,சமுர்த்தி, மோட்டார் போக்குவரத்து, திட்டமிடல் ,கலாசாரம், மகளிர் அபிவிருத்தி, தேசிய அடையாள அட்டை, பொலிஸ் ,தேசிய வீடமைப்பு அதிகார சபை, பதிவாளர் திணைக்களம் ஆகிய பிரிவுகள் கலந்து கொண்டு பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் முதியோர் அட்டைகளும் சிலருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் அங்கவீனமுற்ற நபர் ஒருவருக்கு சக்கர நாற்காலியும், இயலாமை நிலையிலுள்ள முதியோர்களுக்கு ஊன்றுகோலும் மற்றும் மருதமுனை வீட்டுத்திட்டத்தில் எஞ்சியுள்ள வீடுகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை என்பன நடைபெற்றன.

இதில் கல்முனை பிரதேசத்திலுள்ள பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு தங்களது தீர்க்கப்படாத நீண்ட கால பிரச்சினைகளை முன்வைத்து தீர்வுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக கணக்காளர் யூ.எல் ஜவாஹிர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர், கல்முனை, பெரியநீலாவணை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலீஹ் நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்..எச் ஜனூபா பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், உட்பட கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்

# சம்மாந்துறை பிரதேச சபையால் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

டெங்கு கட்டுப்பாட்டு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக சம்மாந்துறை பிரதேச சபையால் டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய சம்மாந்துறை பிரதேச சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் செவ்வாய்க்கிழமை

வெற்றிகரமாக முன்னெடுக் கப்பட்டது.

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றமையை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய கொள்கலங்களான, ரயர்கள், யோக்கட் கப், சிரட்டைகள், மட்டைகள், பிளாஸ்டிக் கொள்கலங்கள் சேகரிக்கப்பட்டதுடன் நீர்தேங்கியுள்ள இடங்கள், வடிகான்களும் துப்பரவு செய்யப்பட்டன.

இதில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல். றாசீக், சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் யூ.எல்.ஏ.மஜீட், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முஸ்தபா, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபையின் மேற்பார்வை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை பிரதேச சபையால் சம்மாந்துறை மத்திய வலயம், சம்மாந்துறை கிழக்கு வலயம், சம்மாந்துறை மேற்கு வலயம் ஆகிய மூன்று வலயங்களாக பிரிக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தினை ஆட்சியாளர்கள் கவனத்தில் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என் றும் அவர் குறிப்பிட்டார்.

# எந்தவொரு மதத்தினது நம்பிக்கையையும் இழிவுபடுத்த எவருக்கும் உரிமை இல்லை

## அருட் தந்தை சிறில் காமினி கருத்து



எந்தவொருமதத்தினதுநம்பிக்கையை இழிவுபடுத்து-வதற்கோ அல்லது விமர்சிப்பதற்கோ எவருக்கும் உரிமை இல்லை. நாட்டின் மத ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடக பேச்சாளரான அருட் தந்தை சிறில் காமினி வேண்டுகோள் விடுத்தார்.

ஜெரோம் பெர்னாண்டோ என்பவரால் கூறப்பட்ட அடிப்படைவாத கருத்துக்களால் நாட்டின் மத ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளதாகவும், இவ்வாறான அடிப்படைவாத கருத்துக்களை மக்கள் மத்தியில் திணிப்பவர்கள் தொடர்பாகப் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

ஜெரோம் பெர்னாண்டோ என்பவர் கத்தோலிக்க மதகுருவானவரோ அல்லது கத்தோலிக்க திருச்சபைக்கோ எந்த விதத்திலும் தொடர்பு உடையவர் அல்லர். தாம் விரும்பியதொரு மதத்தை பின்பற்றுவதற்கும், மதம் சம்பந்தமான உரைகளை நிகழ்த்துவதற்கும் எவருக்கும் சுதந்திரம் உண்டு. எனினும், அதன் ஊடாக இன்னுமொரு மதத்தை இழிவுபடுத்துவதற்கோ அல்லது விமர்சிப்பதற்கோ எவருக்கும் உரிமை இல்லை.

ஜெரோம் பெர்னாண்டோ என்பவருக்கு அனுசரணை வழங்கும் வெளிநாட்டவர்கள் குறித்தும், யார் யாருடன் தொடர்புகளை வைத்துள்ளார் என்பன குறித்து பல்வேறு கருத்துக்கள் சமூக ஊடகங்களில் குறிப்பிடப்பட்டு வருகின்றன. இவை தொடர்பாகப் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் சரியாக தேடிப்பார்க்காமல் இருப்பது அதிசயமாக இருக்கிறது.

ஜெரோம் பெர்னாண்டோ, பௌத்த, இந்து, இஸ்லாம் சகோதர சகோதரிகளின் மனம் நோகும் விதத்திலான மற்றும் மத நம்பிக்கையை இழிவுப்படுத்து கருத்துக்களை வெளியிட்டமை நாட்டின் மத ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்ற விடயமாகும். அவ்வாறான அடிப்படைவாத கருத்துக்கள் நாட்டின் இன, மத ஐக்கியத்தை சீர்குலைக்கும் செயலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கடந்த காலங்களிலும் இதுபோன்ற அடிப்படைவாதிகளால் கூறப்பட்ட கருத்துக்களால் நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள் தொடர்பாகப் பொது மக்கள் நன்கு அறிவர். ஆகவே, நாட்டின் இன, மத ஒற்றுமைக்கும் நல்லிணகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் குறித்து பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியம். – என்றார்.

ஜெரோம் பெர்னாண்டோ என்பவரின் பின்னால் பலம் பொருந்திய சக்தி இருக்குமா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு, பலம்பொருந்திய நபர்கள் இருக்கிறார்களா என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது. அதுபற்றி தேட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அவர் பதிலளித்தார்.

# ராஜபக்சக்களின் கடும் வீழ்ச்சிக்கு சிராணியின் பதவி நீக்கமே காரணம்

## சரித ஹேரத் சுட்டிக்காட்டு



பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு மற்றும் அவர் முன்வைத்துள்ள பதில் ஆகியவற்றை ஆராய நாடாளுமன்றத்தில் உப குழு ஒன்றை நியமிப்பது சிறந்ததாக அமையும்.

2015 ஆம் ஆண்டு ராஜபக்சர்கள் தோல்வியடைய சிரானி பண்டாரநாயக்கவின் சம்பவம் பிரதான காரணியாக அமைந்தது என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளை பெற்றுக்கொள்ள அரசமுறை வெளிநாட்டு மற்றும் தேசிய கடன் ஆகியவற்றை மறுசீரமைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

தேசிய கடனை காலத்துக்கு ஏற்பட மறுசீரமைப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள் ளார்கள்.

அரசியல்வாதிகள் மக்கள் வங்கியிடம் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொடர்பில் நான் தலைமைத்துவம் வகித்த கோப் குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அரசியல்வாதிகளின் செலுத்தப்படாத கடன்களை அறவிடாமல் தேசிய கடனை மறுசீரமைத்தால் சாதாரண வைப்பாளர்கள் பாதிக்கப்படுவார்கள். தேசிய கடன் மறுசீரமைக்கப்படவுள்ளதால் கடனை திருப்பி செலுத்தாமல் இருக்க கடன் பெற்றுள்ள அரசியல்வாதிகள் அவதானம் செலுத்தியுள்ளார்கள். ஆகவே இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கும் யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற ரீதியில் அமைச்சரவையில் முன்வைத்துள்ளார். 2002ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க 07ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிரான குற்றப்பத்திரம் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி ஜனாதிபதியிடம் மின்சாரத்துறை அமைச்சரால் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றப்பத்திரம் தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி நீண்ட விளக்கத்தை வழங்கியுள்ளார். குற்றப்பத்திரம், நீண்ட விளக்கம் ஆகிய-வற்றை ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கும் தீர்மானத்தை ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பொறுப்பாக்கியுள்ளார்.

நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்சார கட்டணத்தை அதிகரிக்க எடுத்த தீர்மானத்தை இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கடுமையாக எதிர்த்தார். மறுபுறம் உயர்தர பரீட்சை காலத்தில் மினவிநியோக தடை அமுல்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

ஆணைக்குழுவுக்கு அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள சுயாதீனத்தன்மையை செயற்படுத்திய காரணத்தால் இவரை பதவி நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது முற்றிலும் தவறானதொரு செயற்பாடாகும். ஆகவே இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உப குழு ஒன்றை ஸ்தாபித்து ஒழுக்கமான முறையில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவின் சம்பவத்தின் இரண்டாம் பாகமாக ஜனக ரத்நாயக்கவின் விவகாரம் காணப்படுகிறது.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக முறையற்ற வகையில் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். 2015 ஆம் ஆண்டு ராஜபக்ஷர்களின் அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு சிரானி பண்டாரநாயக்கவின் விவகாரம் பிரதான காரணியாக அமைந்தது என்பதை தற்போதைய ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

# வீடு புகுந்த சில நபர்களால் வர்த்தகர் சுட்டுக் கொலை

## பதவியாவில் சம்பவம்




பதவியாவின் மஹாசென்புர பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த சிலரால் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் எனப் பதவியா பொலிஸார் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

தேங்காய் எண்ணெய் வர்த்தகம் செய்துவரும் இந்த நபர் இரவில் வீட்டில் இருந்தபோது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த மூவர் இவரை சுட்டுக் கொன்றனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த துப்பாக்கிச்சூடு தொடர்பில் 119 இற்கு கிடைத்த தகவலின் பிரகாரம், பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றதுடன், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் பதவியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதே அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

# வீரவில நகர வங்கியின் ஏ.டி.எம். இயந்திரத்தை உடைத்துப் பணம் திருடும் முயற்சி முறியடிப்பு

## பொலிஸ் அதிரடி

வீரவிலநகரில்பொருத்தப்பட்டிருந்த அரச வங்கி ஒன்றுக்குச் சொந்தமான தானியக்க பண பரிமாற்ற இயந்திரத்தை உடைத்து பணம் பெறும் கொள்ளையர்களின் முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் பொருத்தப்பட்டிருந்த அவசர சமிக்ஞை இன்று (புதன்கிழமை) அதி காலை 2.50 மணியளவில் ஒலியெழுப்பியதையடுத்து பொலிஸ் குழுவொன்று உடனடியாக அந்த இடத்துக்குச் சென்றிருந்தது.

இதன்போது பொலிஸார் வருவதைக் கண்ட கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக ஞானசார தேரர் முறைப்பாடு



போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு எதிராக விசாரணைகோரி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் எழுத்து மூல முறைப்பாடு ஒன்றையும் வழங்கியுள்ளார்.

இந்த எழுத்துமூல முறைப்பாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த போதகர் புத்தரை அவமதித்துள்ளார் எனவும் அவரது இந்த செயற்பாடுகளால் நாட்டின் மத நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் கிறிஸ்தவ அடிப்படைவாத கும்பல் மிக வேகமாக மதமாற்றத்தை பரப்பி வருவதாகவும் கலகொடஅத்தே ஞானசார தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த சதியில் இந்த மத போதகரும் ஓர் அங்கம் என்றும் ஞானசார தேரர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கப்பல் வாடகைக்குப் பெற அரசாங்கம் தீர்மானம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பராமரிப்பு மற்றும் துரித பதிலளிப்புக் கப்பலொன்றை வாடகைக்குப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பராமரிப்பு மற்றும் துரித பதிலளிப்புக் கப்பலொன்றை சர்வதேச போட்டி விலைமனுக் கோரல் முறையைப் பின்பற்றி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2022.11.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய 2023.06.01 தொடக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு வாடகை அடிப்படையில் பராமரிப்பு மற்றும் துரித பதிலளிப்புக் கப்பலொன்றை பணியில் அமர்த்துவதற்கான ஒப்பந்தம் எம்.எஸ். இலங்கை கப்பல் நிறுவனத்துக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




# உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளின் மற்றுமொரு கட்டம் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளின் மற்றுமொரு கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்,

அதன்படி எதிர்வரும் 19 ஆம் திகதி இந்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 32 மத்திய நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதுவரை 2 பாடங்களுக்கான மதிப்பீட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 6 பாடங்களுக்கான மதிப்பீட்டு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை விஞ்ஞானப் பிரிவிலுள்ள பாடங்களுக்கான மதிப்பீட்டு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த இரண்டரை மாதங்களாக தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் மதிப்பீட்டு பணிகளுக்காக ஆசிரியர்கள் விண்ணப்பிக்காமை காரணமாக உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தாமதமாகியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சவாலே சமாளி!

**மாகாண ஆளுநர்களை மாற்றுவதில் ஏற்பட்டிருந்த ஓர் அரசியல் நெருகடி நிலை இயல்பாக்கப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்று ஆளுநர்கள் மாற்றப் பட்டுள்ளார்கள். வடக்கு மாகாணத்திற்கு மீண்டும் ஒரு தமிழர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தி ற்கும் நீண்ட காலத்திற்குப் பின்னர் ஒரு தமிழர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒப்பீட்டளவில் இது ஒரு நல்ல சமிக்ஞைதான்.**

**வடக்கு மாகாண ஆளுநராக முன்னாள் அரச நிர்வாக சேவை அதிகாரி. தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினராகவும் இருந்தவர். ஏற்கனவே மாகாண ஆளுநராகவும் இருந்தவர். அண்மைக் காலத்தில் அரச நிர்வாக சேவையில் அதியுயர் பதவியை அடைந்த ஒருவர். அவர் முதல் தடவையாக ஆளுநர் பதவிக்கு வருவதற்கு முன்பாக இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்கிற உயர் பதவியை அடைந்தவர். அந்தப் பதவியிலிருந்து அவரைப் பதவி விலகவைத்துத்தான் 2019இல் வடக்கு மாகாண ஆளுநராக நியமித்தார் .**

**செந்தில் தொண்டமான் ஏற்கனவே மாகாண சபையில் அமைச்சராக இருந்த அனுபவம் கொண்டவர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருப்பவர். பாரம்பரியம் மிக்க தொண்டமான் எனும் அரசியல் குடும்பத்திலிருந்து வந்தவர். அரசியல் பரிட்சயம் உள்ளவர். பல்லினச் சமூகம் வாழும் ஒரு பகுதியில் பிறந்து வளர்ந்து அரசியலில் ஈடுபட்ட அவரது அனுபவம் ஒரு மேலதிகத் தகமை.**

**சர்ச்சைக்கும் பிணக்குகளுக்கும் இன முரண்பாடுகளுக்கும் அதிக வாய்ப்புகளைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் பணியாற்றுவதற்கும் நிலமைகளைச் சமாளிப்பதற்கும் அவரது இந்த அனுபவம் கைகொடுக்கக்கூடும். என்றாலும் கிழக்கின் சவால் அவ்வளவு இலகுவானது அல்ல என்பதும் கவனத்திற் குரியது. அதவும் சிங்களக் குடியேற்றம் மற்றும் பௌத்த ஆதி க்கம் கிழக்கில் பெரும் பிரச்சினையாக இருக்கும் நிலையிலும், வடக்கு கிழக்கு இனப் பரம்பலை துண்டிக்கும் வகையில் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் கவனம் கிழக்கில் குவிந்தி ருக்கும் நிலையிலும் அங்கு ஆளுநர் பணியை ஆற்றுவது மிகச் சுலபமானதாக இருக்கப்போவதில்லை.**

**மலையகத்தில் சிங்களப் பெரும்பான்மையின் வரலாற்று ரீதியான மேலாதிக்க இருப்பு நிலையை ஏற்றுக்கொண்டு, உழைப்புக்காக வந்தவர்கள் என்கிற அடக்க நிலையை வெளிப்படுத்தும் அரசியல் நிலையிலிருந்து கிழக்கு முற்றிலும் மாறுபட்ட, ஆக்கிரமிப்புக்கு எதிரான மனோநிலையைக் கொண்ட, இனவிழிப்புக் கூர்மையடைந்துள்ள மூவினங்களையும் கொண்ட ஒரு பகுதி. எனவே தமிழராக இருந்தாலும் இங்கு ஆளுமை செய்வதென்பது மிகச் சவாலானது. அந்தச் சவாலைத் தி றம்படக் கையாண்டு சிறப்பான அடைவைக் காட்டுவதும் கிழக்கை அமைதியான மாகாணமாகத் தொடர்ந்து வைத்திருப்பதும் செந்தில் தொண்டமான் வெற்றிகொள்ளவேண்டியவைகள். அதில் அவர் பெறும் வெற்றியே கிழக்கில் தொடர்ந்தும் தமிழ் ஆளுநர்கள் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களையும் தக்க வைக்கும்.**

**கத்திமுனையில் நடப்பதைப் போன்று எந்தவொரு இனத்தி ற்கும் அதிக சாய்வைக்கொண்ட நிர்வாகத்தை ஆற்ற முற்பட்டால் கிழக்கில் ஆளுநர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பலமானவை. அதேநேரம், ஆக்கிரமிப்பு அத்துமீறல்களுக்கு இடமளிக்காமல் ஏற்கனவே போராலும் வறுமையாலும் பாதுக்கப்பட்ட ம க்களைக் கைப்பிடித்து தூக்கிவிடுவதுடன், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், சிங்கள மற்றும் தமிழ் என்கிற இரு இனங்களுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டுள்ள முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் கிழக்கில் உள்ள சவால்கள்.**

**ஒப்பீட்டளவில் கிழக்கைவிட வடக்கு நிர்வாக ரீதியில் சவால்கள் குறைந்த பகுதியாக இருந்தாலும். தமிழ் இனப் பிரச்சினையின் மையப் பகுதியாகத் தலைமைப் பகுதி யாக இருக்கும் வடக்கு எப்போதும் முழு நாட்டினதும் தீவிர கண்காணிப்பின் கீழ் இருப்பது. இதன் ஒவ்வொரு நகர்வும் ஒட்டுமொத்த மாகாண சபைகளுக்கும், அதிகாரப் பகிர்வுக்கும் முன்னுதாரணங்களாகக் கொள்ளப்படும் வாய்ப்புக்களை அதிகம் கொண்டிருக்கின்றன. எனவே இதன் நிர்வாகச் செழுமையும் ஆளுமை முன்னதாரணங்களும் மிக முக்கிய மானவை.**

**இந்தச் சவால்களை எதிர்கொண்டு புதிய ஆளுநர்கள் தமது கடமையை ஆற்றவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு**

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி மக்களின் எண்ணங்களை வெளிக்கொண்டுவரலாம்

## சி.வி.விக்கினேஸ்வரன் கூறுகிறார்



இலங்கைவாழ் தமிழ்மக்கள் கடந்த கால அரசாங்கங்களுடன் சுமார் 70 வருடங்களுக்கும் மேலாகப் பேச்சு நடத்தி வருகின்றனர். எனவே இப்போது தமிழ் மக் களின் தேவை என்ன என்பது தொடர்பாக அரசாங்கம் அறிந்திருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் மனதி லுள்ள உண்மையான எண்ணங்களை வெளிக்கொணரமுடியும் என்பதுடன், அவை பெரும்பான்மையின மக்களுக்கு உவப்பற்றதாக இருக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகப் பேச்சுகளின் நீட்சியாக அதி காரப் பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங் கத் தரப்புக்கும் வடக்கு, கிழக்கு மாகா ணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கும் இடையில் திங்கட்கிழமை நடைபெற்ற பேச்சின்போது, மாகாணசபைகளைத் தற்காலிகமாக நிர்வகிக்கும் வகையிலான இடைக்கால நிர்வாகமுறைமை தொடர்பில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான சி.வி.விக்கினேஸ்வரனால் யோச னையொன்று முன்வைக்கப்பட்டது.

இலங்கைவாழ் தமிழ் மக்கள் கடந்த கால அரசாங்கங்களுடன் சுமார் 70 வருடங்களுக்கும் மேலாகப் பேச்சு நடத்தி வருகின்றனர். எனவே இப்போது தமிழ் மக்களின் தேவை என்ன என்பது குறித்து அரசாங்கம் அறிந்திருக்கவேண்டும்.

இந்நாட்டில் சுமார் 3000 வருடங் களுக் கும் மேற்பட்ட காலம் தமிழ்மொழி யைத் தொடர்ச்சியாகப் பேசுபவர்கள் என்ற ரீதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்கள் சர்வதேச பிரகடனங்களின் சரத்துக்களுக்கு அமைவாகத் தாம் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நன்கறிவர்.

இலங்கையில் பதிவு செய்யப் பட்ட அனைத்துத் தமிழ்க் கட்சிக ளும் அரசமைப்பின் ஊடாக சமஷ்டி முறையிலான பரவலாக்கத்தையே வலியுறுத்தி வந்திருக்கின்றன. இது குறித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் மனதி லுள்ள உண்மையான எண்ணங்களை வெளிக்கொணரமுடியும் என்பதுடன், அவை பெரும்பான்மையின மக்களுக்கு உவப்பற்றதாக இருக்கக்கூடும்.

அரசாங்கம், அரச அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரால் எமது மக் களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டுவரும் ஒடுக்குமுறைகள், மீறல்கள் என்பன அரசுக்கு எதிராகத் திரும்பக்கூடும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படுவதுடன் அரசமைப்பின் ஊடாக தமிழ்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நன்மைகள் அவர்களுக் குக் கிடைக்கப்பெறவேண்டும். - என்று விக்கினேஸ்வரன் அவரது யோசனையில் வலியுறுத்தியுள்ளார்.

அது மாத்திரமன்றி இவ்விடயத்தில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை மேற்கோள் காண்பிக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ள அவர், 13 ஆவது தி ருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர் பாக விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக மாகாணசபை முறைமையு டன் தொடர்புடைய 13 ஆம் திருத்தத்தின் சரத்துக்களும் மாகாணசபைகள் சட்டமும் மாகாணசபைகள் தனித்த கட்டமைப்புக் கள் அல்ல, மாறாக அவை மத்தியின் ஓரங் கமே என்பதைக் காண்பிப்பதாகக் குறிப் பிட்டுள்ள விக்கினேஸ்வரன், ஆளுநர் மற்றும் அவரது அதிகாரங்களுடன் தொடர்புடைய சரத்துக்கள், மாகாணசபை களின் செயற்பாடுகளில் அவர் இயங்- குநிலையிலுள்ள ஒரு முக்கிய உறுப்பினர் என்பதை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பொருளாதார நெருக்கடி நிலவும் தற்போதைய சூழ்நிலையில் மாகாணசபைகள் முறைமை சுமுக மாகவும், அர்த்தமுள்ள விதத்திலும் இயங்கவேண்டுமானால் சட்டரீதி யாகவும் நிர்வாகரீதியாகவும் பல்வேறு விடயங்களைச் செய்யவேண்டியிருப்ப தாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 10 வருடகால மாக மாகாணசபைத்தேர்தல்கள் தாம தப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறைந்த பட்சம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக் கேனும் தாமதமின்றி மாகாணசபைத் தேர் தல்களை நடத்தவேண்டும் வலியுறுத்தி யுள்ள விக்கினேஸ்வரன், இருப்பினும் இன் னும் சில மாதங்கள் தேர்தலைத் தாமதிப் பது பெரிய விடயமல்ல என்றும், ஏனெனில் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக அது சார்ந்த சில முக்கிய விடயங்களைச் செய்துமுடிக்கவேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மாகாணசபைகளை நிர்வகிக்கக்கூடிய தற் காலிக நிர்வாகசபையொன்றை நிறுவுவ தற்கான யோசனையை முன்வைத்துள்ள அவர், அந்தச் சபை யாரை உள்ளடக் கியிருக்கவேண்டும் என்றும், எத்தகைய அடிப்படையில் அமையவேண்டும் என்றும் விளக்கமளித்துள்ளார்.

# பாதுகாப்புச் சீர்திருத்தங்கள் அமெரிக்காவுக்கு விளக்கம்



இராணுவத்தினரின் அனுமதிக்கப் பட்ட எண்ணிக்கையை பேணி அவர்களை பாரம்பரிய கடமைகளில் ஈடுபடுத்துவ தற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உட்பட, பாதுகாப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், அமெரிக்க பிரதி உதவி செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு விஜயம் செய்துள்ள அமெ ரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் (தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகம்) அஃப்ரீன் அக்தருடன் செவ்வாய்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையை சரியான, அங்கீகரிக் கப்பட்ட அளவுக்குள் பேணி, பாரம்பரிய இராணுவக் கடமைகளில் அவர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் இதன் போது தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சீர்திருத்தங்கள் தொடர் பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் அமெரிக்க பிரதி உதவிச் செய லாளர் அக்தரிடம் தெரிவிக்கப்பட்டன.

அமெரிக்கா வழங்கிய ஒத்துழைப்பு நடவடிக்கைகளை நினைவு கூர்ந்த இராஜாங்க அமைச்சர் தென்னகோன், இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வழிமுறை கள் குறித்தும் கலந்துரையாடினார்.

மேலும் கடல்சார் விழிப்புணர்வு மற் றும் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்து வதில் இலங்கைக்கு உதவும் அமெரிக் காவின் முயற்சிகள் மற்றும் கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிற பிராந்திய பிரச்சினைகளை அதன் பாதுகாப்புக் கொள்கையில் முன்வைப்பதற்கான இலங்கையின் முயற்சிகள் ஆகியவை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையா டப்பட்டன. வெளிநாடுகளில் அமைதி காக்கும் பணிகளில் இலங்கை இராணுவத் தின் உறுப்பினர்களுக்கான வாய்ப்புகள் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலின் போது இராஜாங்க அமைச்சர் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

# சிங்களம் பயிற்சி நெறி இறுதி நாள் நிகழ்வு





பொதுநிர்வாகசுற்றறிக்கை 18ஃ2020 இற்கு அமைவாக அரச உத்தியோ கத்தர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய மொழித்தேர்ச்சியை அடிப்படையாக கொண்டு சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான 150 மணித்தி யால இரண்டாம் மொழி சிங்களம் பயிற்சி நெறியின் (மட்டம்2) இறுதி நாள் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று (புதன்கிழமை) நடைபெற்றது.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பழில், சிங்கள மொழி வளவாளர் ஏ.எம்.எம்.முஜீப், பிரதேச செயலக நலன்புரிச் சங்க செயலாளர் எம்.எச்.எம். முபாறக், இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி விடய உத்தியோகத்தர் ஏ.ஆர்.எப். அஸ்ரினா உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.